திருவள்ளுவர் ஆண்டு 2037

# செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 101 பகுதி : 8 ஆகஸ்ட்-07



மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | செயலாளர் |
| திரு. இரா குருசாமி பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. எஸ்.எம். நாகராசன் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. பி. வீரணன் | உறுப்பினர் |
| திரு. மா. ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |

## கல்லூரிக் குழு

| | |
|---|---|
| திரு. டாக்டர்.ந. சேதுராமன் M.S., M.Ch., M.N.M.S.(Uro) F.I.C.S., | தலைவர் |
| திரு. இரா.குருசாமி பி.ஏ., | செயலாளர் |
| திரு. இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி பி.இ., | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி ராஜா எம்.எஸ்.சி., எம்.ஃபில்., | உறுப்பினர் |
| இராஜா. திரு. டி.என்.எஸ். முருகதாஸ் தீர்த்தபதி | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. மா.ச. மாரியப்பமுரளி பி.ஏ., பி.எல்., | உறுப்பினர் |
| டாக்டர். திரு. க. சின்னப்பா பிஎச்.டி., முதல்வர் | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. வீ. காந்திமதி பிஎச்.டி., இணைப்பேராசிரியை | உறுப்பினர் |
| டாக்டர். திருமதி. செ. தனலெட்சுமி பிஎச்.டி., இணைப்பேராசிரியை, பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |
| டாக்டர். திரு. இரா. மோகன் எம்.ஏ., பிஎச்.டி., | உறுப்பினர் |

# செந்தமிழ்

(தோற்றம் 1902)

தொகுதி : 101
பகுதி : 8
**ஆகஸ்ட்** 2007

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு **2037**



வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 6 | |

ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–625 001.

# பொருளடக்கம்


இதழ்மணம் 291

வாழ்க்கைக் கணக்கு 292
கவிவேந்தர் கா. வேழவேந்தன்

இரு (வேறு) நெறி ம.ரா.போ. குருசாமி 293

மருத்துவக் கலைச் சொற்கள் 297
மரு.சே.பிரேமா

பாற்கர சேதுபதி நான்மணிமாலை 301
ஆசிரியர் : சிவசம்புப் புலவர்
விளக்கவுரை ஆசிரியர் : பேராசிரியர். இரா. சதாசிவம்

இலக்கியங்களின் வரையறையில் "கற்பு" 321
முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

# இதழ்மணம்

பேராசிரியர் ம.ரா.போ. குருசாமி அவர்கள் *"இருவேறு நெறி"* என்ற தலைப்பில் வைதிக சமயத்தையும் சைவ சமயத்தையும் இனம் கண்டு உரைத்திருப்பது கற்றுச் சிந்திப்பதற்குரியதாகும். வேள்விச் சமயங்களின் எல்லையை வரையறுத்துக் காட்டி, அதற்கு மேல் சைவநெறி காட்டும் முடிந்த முடிவுகளை எடுத்துரைப்பது தமிழன் தன் தமிழ்ச் சமய நெறியை மறந்து அறியாமையில் மூழ்கி, சடங்கு ஆச்சாரங்களில் திசை தவறிப் போய்விடக்கூடாது என்னும் ஆழ்ந்த கவலையின் வெளிப்பாடும் வரலாற்றுப் பின்புலமும் கட்டுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

தமிழர் சமயம் மெய்ப்பொருள் தேடலின் விளைவாகும். புற வேடங்களும் ஆச்சாரங்களும் கவசமாகலாம்; அதற்குமேல் அருள் நாட்டமும் பக்திச் சிரத்தையுமுடைய உயிர் பக்குவ நிலையில் மேன்மையடைய நெடிது பயிலும் வாழ்வு நெறி சைவ நெறியாகும். தமிழர்கள் பன்னெடுங்காலம் முயன்ற மெய்ப்பொருள் தேடலின் வரலாறே மூவர் பாடிய தேவாரம் என்பது தேவாரத்தை ஊன்றிக் கற்குந்தோறும் உணரலாம். தமிழ் ஞானசம்பந்தன், தமிழோடு இசைபாடல் மறந்தறியேன், ஆரூரன் தமிழ் மாலைகள் என மூவரும் தங்கள் கருத்துக்கள் தமிழோடு தொடர்புடையதாகப் பாடியிருப்பது வைதிக நெறியினின்றும் மாறுபட்டிருப்பதை உணர்த்துவதாகும்.

மூவரின் இந்தத் தெளிந்த மெய்ப் பொருட்செய்தியைச் சேக்கிழாரும் கச்சியப்ப முனிவரும் சிவக்கவி மணியும்நன்கு உணர்ந்து உணர்த்தியிருப்பது பேராசிரியருடைய முடிவை உறுதி செய்கிறது.

வேள்விக்கோட்பாடுகளைச் சொல்லி இம்மைப் பேற்றை வலியுறுத்தி புறவாழ்க்கையில் ஆரவாரித்துப் புழுதி கிளப்புவது ஒருவகை ஆரவாரம். இம்மை மறுமைப் பேறுகளை நல்கவல்ல அருள் தேடலை வலியுறுத்தி உயிரைப் பக்குவப்படுத்துவது அருள்வாழ்வு. புறத்தே சில நேரங்களில் ஆரவாரம் தேவையாக இருக்கலாம். அகத்தே அடக்கம் தேவை. இரண்டையும் கலவையாக்கி இந்து சமயம் என்றனர். வேதம் சிறப்பு என்னும் நிலை ஏற்படுமானால் மெய்ம்மை மறைந்து பொய்ம்மை பெருகும் அவலம் ஏற்படும் என்னும் கவலை நியாயமானது.

பேராசிரியர் சே. பிரேமா அவர்கள் *"மருத்துவக் கலைச் சொற்கள்"* குறித்த கட்டுரை கலைச் சொல் ஆக்கம் குறித்த விரிவான செய்திகளை எடுத்துரைக்கிறது. பொது சிறப்பு நிலைகளில் சொற்களின் பொருள் அமைதி குறித்து ஆசிரியர் நுட்பமாக விளக்கியுள்ளது. மாணவர்களும் அறிஞர்களும் சிந்தித்தற்குரியதாகும்.

# வாழ்க்கைக் கணக்கு

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

சுறுசுறுப்பைக் கூட்டுங்கள்; வெற்றி கிட்டும்!
சோம்பலினைக் கழியுங்கள்; நலங்கள் கிட்டும்!
திறமையினைப் பெருக்குங்கள்; பெருமை கிட்டும்!
செயல் முறையை வகுத்திடுங்கள்; செழுமை கிட்டும்!
அறநெறியைக் கூட்டுங்கள்; அமைதி கிட்டும்!
அழுக்காற்றைக் கழியுங்கள்; அன்பு கிட்டும்!
சிறப்புகளைப் பெருக்குங்கள்; மேன்மை கிட்டும்!
சீர்த்திட்டம் வகுத்திடுங்கள்; உயர்வு கிட்டும்!

நல்லுழைப்பைக் கூட்டுங்கள்; செல்வம் கிட்டும்!
நரித்தனத்தைக் கழியுங்கள்; நட்பு கிட்டும்!
கல்வியினைப் பெருக்குங்கள்; அறிவு கிட்டும்!
காலத்தை வகுத்திடுங்கள்; பயன்கள் கிட்டும்!
சொல்லாற்றல் கூட்டுங்கள்; புகழ்ச்சி கிட்டும்!
சுயநலத்தைக் கழியுங்கள்; உறவு கிட்டும்!
பல்லுதவி பெருக்குங்கள்; பரிவு கிட்டும்!
பயன்வாழ்வை வகுத்திடுங்கள்; இன்பம் கிட்டும்!

புன்னகையைக் கூட்டுங்கள்; பொலிவு கிட்டும்!
பொறாமையினைக் கழியுங்கள்; மகிழ்ச்சி கிட்டும்!
நன்மைகளைப் பெருக்குங்கள்; இனிமை கிட்டும்!
நல்வாழ்வை வகுத்திடுங்கள்; வளமை கிட்டும்!
இன்சொல்லைக் கூட்டுங்கள்; ஏற்றம் கிட்டும்!
இழிசெயலைக் கழியுங்கள்; உவகை கிட்டும்!
நன்னெறியைப் பெருக்குங்கள்; அமைதி கிட்டும்!
நற்பாதை வகுத்திடுங்கள்; மாட்சி கிட்டும்!

# இரு (வேறு) நெறி

ம.ரா.போ. குருசாமி

திருத்தொண்டர் புராண **"வம்பறா வரிவண்டுச் சருக்கம்"** திருஞானசம்பந்தர் வரலாற்றொடு தொடங்குகிறது. ஆளுடைய பிள்ளையாரின் வரலாற்றை தொடங்குமுன் தெய்வச் சேக்கிழார் பின்வரும் பாடலை முதற்பாடலாக அமைத்துள்ளார்.

*"வேதநெறி தழைத்தோங்க*
*மிகுசைவத் துறைவிளங்கப்*
*பூதபரம் பரைபொலியப்*
*புனிதவாய் மலர்ந்தழுத*
*சீதவள வயற்புகலித்*
*திருஞான சம்பந்தர்*
*பாதமலர் தலைக்கொண்டு*
*திருத்தொண்டு பரவுவாம்"*

ஞானசம்பந்தப் பெருந்தகையின் திருவடி மலர்களைத் தலையில் அணிந்துகொண்டு அப்பெருமானின் தொண்டினைப் பரவி, காவியத்தைத் தொடங்குவோம் என்பது இப்பாடலின் திரண்ட கருத்து. சீகாழித் திருக்குளக் கரையிலே குழந்தைச் சம்பந்தர் அழுவதிலிருந்துதான் அப்பெருமானின் ஆன்ம வரலாறு தொடங்குகிறது. அந்த ஞானசம்பந்தக் குழந்தை ஏன் அழுதது? வேத நெறி தழைத்து ஓங்கவும் பெருமைக்கு உரிய சைவத்துறை விளக்கம் பெறவும் பூதபரம்பரை பொலிவதற்காகவும் திருவாய் மலர்ந்து அழுதார் பிள்ளையார். இந்தச் செய்தி சொல்லும் இச் செய்யுளின் முதல் அடிமட்டுமே இங்கே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

வேள்விச் சடங்கை மையமாகக் கொண்ட வேதநெறி (வைதிகம்) பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமானே முழுமுதற் பரம்பொருள் என்று நம்பி வாழும் சைவம் ஆகிய இரண்டும் இன்று இந்து சமயம் என்ற ஒரே பெயருக்குள் அடக்கப்பட்டுள்ளன. வைணவம், சாகிதம், கௌமாரம், காணபத்தியம், சௌரம் ஆகியவையும் நம் கணிப்பில் மேலே குறித்த இந்து சமயத்துள்ளே அடங்குவனவே. ஆறு சமயங்கள் என்ற பொருளிலே 'ஷட் மதம்' என்று வடமொழியிலே சுட்டுவார்கள்; ஆறு மதங்கள் என்று தனித்தனியாக உள்ளவை எப்படியோ 'இந்து' என்ற ஒரே மதமாகக் கருதப்படும் நிலை ஏற்பட்டது.

இந்துமதம் ஒன்றே என்றால் சைவம் முதலியவை ஆறு மதங்கள் என்று எப்படிச் சொல்வது?

இந்து சமயத்தின் மறை என்பது இருக்கு முதலான நான்கு வேதத் தொகுதியாகும். வைதிகம் – அதாவது வேத சம்பந்தம் உடையது – என்பது இந்து சமயத்தின் வேறு பெயர்.

வேதநெறி ஒன்றுதான் வைதீக மதம் என்றால், சைவ மதம் என ஒன்று தனியாகக் கொள்வது எப்படிப் பொருந்தும்? சேக்கிழாரின் திருவாக்கினை மீண்டும் நினைவிலே நிறுத்திப் பாருங்கள். "வேத நெறி தழைத்தோங்க *மிகு சைவத் துறை விளங்க*" – இரண்டும் வெவ்வேறல்ல என்றால் வேதநெறி (இந்துமதம்) தழைத்தோங்க என்றுமட்டும் சொல்லி நிறுத்தியிருக்கலாமே! வேதநெறி தழைத்து ஓங்கவும் மிகு சைவத் துறை விளங்கவும் என்று இரண்டாக – வெவ்வேறாகத் தெய்வச் சேக்கிழார் ஏன் கூறினார்?

திருஞான சம்பந்தர் புராணத்தின் முதல் பாட்டின் முதல் அடி இப்படி ஐயத்தினை எழுப்புகிறது.

தொடரமைப்பை மனத்தில் நிறுத்தி எண்ணிப் பார்த்தால், வைதீகம் ஒன்று சைவம் மற்றொன்று என்று முடிவு செய்வது பொருத்தமெனவே தோன்றுகின்றது.

பெரிய புராணத்துக்கு தம் வாழ்நாள் காணிக்கையாக மிகப் பரந்த சீரிய உரையினை வரைந்து உதவியவர் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் அவர்கள் அந்தப் பேருரை வேதநெறி சைவத்துறை என்பவை பற்றி என்ன சொல்கிறது பார்க்கலாம்.

"வேதநெறி வேதவிதிப்படி நிகழும் வைதிக ஒழுக்கம் சைவத் துறை சிவாகம விதிப்படி நிகழும் சரியை முதலிய சிவ தருமங்கள் வேதம் உலகர்க்கும் சிவாகமங்கள் சத்திநிபாதர்க்கும் அருளப்பட்டன – வேதம் முடிந்த இடத்தில் சிவாகமம் தொடங்குகிறது."

---

சத்திநிபாதம் – பக்குவமுடைய ஆன்மாவிலே திருவருள் பதிகை.
சத்திநிபாதன் – திருவருள் பதியப் பெற்றவன் – லெக்சிகன்

'வேதம் முடிந்த இடத்தில் சிவாகமம் தொடங்குகிறது' என்ற விளக்கத்தை மனத்தில் நன்கு பதியவைத்துக் கொள்ள வேண்டும். அதாவது, வேதநெறி தொடங்கி முடியும் இடத்தில் சைவநெறி தொடங்குகிறது. நமக்கு விளங்குகிற வகையில் விளக்க வேண்டுமென்றால் வேதநெறி பள்ளிக்கல்வி போன்றது; சைவநெறி, கல்லூரிக் கல்வி போன்றது.

வேதத்தின் தேடலில் இறையருள் கையகப்படுவதில்லை. நேஅதி (நேதி) அது இல்லை என்று பரம்பொருள் அல்லாதவற்றை ஒதுக்கிக் கொண்டே களைப்பது வேத நெறி "பூதங்கள் அல்ல, பொறி அல்ல, வேறு புலன் அல்ல, உள்ளம் மதியின் பேதங்கள் அல்ல இவையன்றி நின்ற பிற அல்ல என்று பெருநூல் வேதம் கிடந்து தடுமாறும்....." என்று இக்கருத்தைப் **பரஞ்சோதி முனிவர்** தெளிவுப்படுத்தியுள்ளார். "பாங்கு உள நாம் தெரிதும் எனக் கோடிப் பழமறைகள் ஓடி ஓடி இளைத்து இளைத்து எட்டுந்தோறும் வாங்கு பரவெளி முழுதும் நீண்டு நீண்டு மறைந்து மறைந்து ஒளிர்கின்ற மெய்ச்சுடர்" என்று வேதங்களுக்கு எட்டாத பரம்பொருளை விளக்குவார், வள்ளற்பெருமான். பக்தர்களின் கைப்பொருளாய் – அடியவர்க்கு எளிமையதாய் இருக்கும் மெய்ப்பொருள் வேத (வேள்வி) நெறிக்கு எட்டாக் கனி. இந்த உண்மை சைவ நூல்களில் – திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் – தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

*வைதிக நெறியினராகிய ஸ்மார்த்த வேதியர்க்கு சிவாலயங்களில்* பூசை செய்யும் உரிமை இன்றளவும் இல்லை என்பதையும் நினைவிலே கொள்ள வேண்டும்.

ஸ்மார்த்த வேதியர்களும் திருநீறு பூசுகிறார்கள். முப்போதும் திருமேனி தீண்டித் திருக்கோயில்களில் வழிபாடு செய்யும் ஆதி சைவர்களும் திருநீறு பூசுகிறார்கள். இருவர் பூசும் திருநீறும் ஒன்றல்ல, வெவ்வேறு என்று கச்சியப்ப முனிவர் வேறுபடுத்திக் கூறியுள்ளார். ஒன்றை வைதிக (வி) பூதி என்றும் மற்றொன்றைச் சைவ வெண்ணீறு என்றும் வெவ்வேறு பெயரிட்டு அவற்றின் தன்மையைத் தணிகைப் புராணத்திலே விளக்கியிருக்கிறார்.

உலகியல் (பௌதிகம்) நாடும் உலகருக்கு உரிய வைதிகத் திருநீறு வேள்வித் தீயில் வெந்து வரும் பொடியாகும். அதனைப் பூசுவோர்க்கு இவ்வுலக போகம் மட்டுமே கிடைக்கும். மும்மலத்திலிருந்து

விடுபட்டுத் திருவருட் பதிவினைப் பெற்ற சித்தாந்த சைவருக்கு உரியது சைவ வெண்ணீறு சைவ வெண்ணீறு. நிகரற்றது. இந்த நீறு செந்தீயில் வேகவைத்துப் பொடித்துப் பெறுவது ஆகம வழிக்கு உரியது.

*"உலகருக்கு உரிய மறைவழி வேட்கும்*
*ஓங்கிய விரசையிற் பொடித்த*
*இலகு வெண் ணீறு வைதிக பூதி;*
*இன்னது புத்தியே அளிக்கும்*
*மலம் அறு சத்தி பதிந்தவர்க்கு உரித்தாய்*
*வயங்கும் ஆ கமவழி தீக்கை*
*நிலவுசெங் கனலில் பொடித்த வெண் பூதி*
*நிகரிலாச் சைவவெண்ணீறு"*

என்பது கச்சியப்ப முனிவரின் வாக்கு.

(விரசை : விரசாக்கினி, யாகத் தீ, புத்தி : போகம்)

பூசும் திருநீற்றில் கூட வேத நெறிக்கு உரியது என்றும் சைவர்களுக்கு உரியது என்றும் இரண்டு வகைப்படுத்திக் காண்பது சிவாகம முறைமை. திருநீறு போகம் மட்டுமே தரவல்லது; சைவத் திருநீறு திருவருள் வாய்க்க அருள்வது. 'போகமும் திருவும் புணர்ப்பானை' என்ற திருமுறைத் தொடர் இங்கே நினைப்பூட்டத் தக்கது. போகம்: இம்மைப் பயன்; திரு: மறுமைப் பேறு, வைதிக பூதி இம்மை நலம் மட்டுமே தரும்; சைவ நீறு மறுமைப் பெரும்பேற்றினை அருளும்.

ஒரே வீட்டில் வாழ்ந்து தீரவேண்டிய நிலையில் இரண்டு குடும்பங்கள்; ஒரே வீட்டின் இரண்டு பகுதிகளில் குடியிருப்பது மட்டுமே பொது. வாழும் இடம், வாழும் முறை முதலியன வெவ்வேறுதான்.

வேத நெறி வேறு; சைவ நெறி வேறு. வரலாற்றுக் கலப்பிலே இந்துமதம் என்ற ஒரே அமைப்பிலே இருந்தாலும் சைவம் வேறுதான்; வைதிகம் வேறுதான்.

# மருத்துவக் கலைச் சொற்கள்

**மரு.சே.பிரேமா** எம்.டி(பி.எச்.டி.,)
பேராசிரியர்–தலைவர்
*சித்த மருத்துவத்துறை தமிழ்ப் பல்கலைக் கழகம்,*
தஞ்சாவூர்.

மக்கள் தம் கருத்துக்களை நாவொலிகளால் அமைந்த சொற்களால் உணர்த்துகின்றனர். சொல் வடிவங்கள் அவரவர் கல்வி அறிவாற்றல்களுக்கேற்ப அமையும். அவற்றை வழக்குச் சொல் செஞ்சொல் என்பர். சொற்களை யாப்பிலக்கணப்படி அமைத்து ஓசையோடு கூறின் அவை செய்யுள் கவிதை எனப்படும். இவற்றிற்கெல்லாம் வடிவமைத்துச் செம்மைப்படுத்தின் அவை இலக்கியம் எனப்படும். இலக்கியத்தை எவ்வாறு ஆக்கம் செய்வது எனக் கூறும் கருவிகளை நூல் என்றும் இலக்கணம் என்றும் கூறுவர்.

பேச்சுமொழி உடனுக்குடன் மறைந்து விடும். எழுத்து மொழி நிலைபெற்று எதிர்காலத்திற்குப் பயன்தரும். இயல்பான வழக்குச் சொற்கள் சிந்தையில் நிலை கொள்ளாது, அழகும் இசைநயமும் பொருள் நுட்பமும் அமைந்த சொற்கள் சிந்தையில் நிலை கொள்ளும். பொதுவாக இவற்றைக் கலைச்சொற்கள் என்பர்.

மக்கள் உடலாலும் ஐம்புலன்களாலும் மனத்தாலும் புத்தியாலும் சிந்தையாலும் இன்புற்று வாழ நிலம், நீர் முதலிய பூதப் பொருள், அவற்றால் விளையும் இயற்கைப் பொருளையும் அவற்றால் தம் அறிவாற்றலைக் கொண்டு படைக்கப் பெறும் செயற்கைப் பொருள்களையும் பயன்படுத்துகின்றனர். இவ்விருவகைப் பொருள்களையும் சுட்டி உணர்த்தும் ஒலிக்குறியீடுகள் யாவும் பெயர் எனப்படும். பெயர்கள் உணர்வு அடிப்படையிலும் காரணம் பற்றியும் ஆக்கம் பெறும். அப்பொருள்களின் பெயர்களை அழகும் இனிமையும் அறிவு நுட்பமும் அமையத் திரிபின்றி அமைக்கப் பெறுவன கலைச்சொல் எனப்படும்.

மக்கள் வாழ்க்கை பல்வேறு இயற்கை, செயற்கைப் பொருள்களால் அமைவது. அவை உணவு, உடை, அணி, வீடு, ஊர்தி அவற்றை ஆக்கம் செய்யும் கருவிகள், கல்வி, கேள்வி முதலியவையாகும். இவை யாவும் செயற்கைப் பொருள்களே. இவை ஒவ்வொன்றும் துறையாக அமையும். அம்முறையில் அவை வேளாண்துறை, சமயல்துறை, வணிகத்துறை பல்வேறு தொழில்துறை, அறிவியல்துறை, சமயத்துறை, தத்துவத்துறை, கலைத்துறை முதலிய பல் துறைகள் அமைந்துள்ளன. ஒவ்வொரு துறையிலும் சிறப்பாகப் பயன்படுத்தும் பொருள்களை அப்பொருளின் இயற்கைத் தன்மை, தோற்றம் வடிவு பயன்பாடு அவற்றைக் கொண்டு ஆக்கம் பெறும் பொருள்நிலை முதலியவற்றை உணர்த்த அவற்றின் பொருள் நுட்பம் விளங்க அமைக்கப் பெரும் சொற்கள் கலைச் சொற்களாகும். ஒரு பொருளைத் திரிபின்றி உணர ஆக்கம் செய்யும் சொற்களையே கலைச்சொல் என்பது மரபு.

பொதுவாக விருந்து என்னும் சொல் அறுசுவை உண்டியைப் படைத்து அளித்தற்குப் பெயர். விருந்துணவு பசியை நீக்குவதோடு நாவிற்குப் பல்வேறு சுவைகளைத் தந்து மனத்தை இன்புறுத்தி ஆனந்தம் செய்வது. இவ்வடிப்படையில் செவிக்கு இனிதாக வழங்கும் இசை கண்ணிற்கு அழகாக விளங்கும் காட்சி அறிவுக்குப் பயனாக வழங்கும் பேருரை முதலியவற்றைச் சிறப்பித்துச் சொல்லும்போது இசைவிருந்தாளித்தார் – நாட்டிய விருந்தளித்தார். சிந்தனைக்கு அறிவு விருந்தளித்தார் என வழங்குமிடத்து விருந்து என்பது கலைச்சொல்லாகிறது – சுவையானவற்றை எல்லாம் அமிர்தம் என வழங்குவர். அரிதாகப் பேசினார் என்பதைத் திருவாய் மலர்ந்தார் என்னுமிடத்து மலர் கலைச் சொல்லாகிறது.

இனி, காரண அடிப்படையில் அரிசி முதலியவற்றால் அவை கமழ ஆக்குமிடத்துப் பொங்கல், புளியோதரை, பாலன்னம், தயிர்ச்சோறு என்பதும் துணைக்கறிகளைப் பொறியல், அவியல், கூட்டு, வறுவல் என்பதும் கலை நிலையில் அமைந்த சொற்களாகும். மற்றும் பல பொருள்களுக்குரிய ஒரு சொல்லைக் குறிப்பாக ஒரே பொருளை

உணர்த்தும் வண்ணம் திரித்துக் கொள்வதும் கலைச் சொல்லாகும். முன் என்பது முன்னிலை இடத்தையும் கடந்த காலத்தையும் முதலாவது நிலையையும் குறிக்கும். முன்னோன் என்றால் பழையவன் என்பதைக் குறிக்கும். ஆனால் எல்லாப் பொருளுக்கும் மூலமாகவும் தலைவனாகவும் விளங்கும் இறைவனைக் குறிக்க அச்சொல்லை முனைவன் எனத் திரித்துக் கூறுவர். இலக்கியத்தில் தலைவன் தலைவியை கிழவன், கிழத்தி என்பர். கல்வி பயில்வோரை மாணாக்கர், சீடர் என்பதும் முதல் நின்று ஏடு படிப்பவனைச் சட்டாம் பிள்ளை என்பதும் இவ்வாறு வழங்கும் மதிப்புடைய சொற்கள் யாவும் கலைச் சொற்களேயாகும்.

ஒவ்வொரு தொழில்துறையிலும் புரியும் செயல்கள் பயன்படுத்தும் கருவிகள் முதலியவற்றிற்குச் சிறப்புப் பெயர்கள் வழங்குவதும் செயற்கைப் பொருள்களுக்கு கவர்ச்சியாகப் பெயரிடுவதும் கலைச் சொற்களேயாகும். இயல்பாக யாவரும் புரியும் செயல்களைச் சிறப்பித்துச் சொல்லும்போது அவர் உண்பதே ஒரு கலை, நடப்பதே ஒரு கலை எனப் பாராட்டுவதும் இவ்வடிப்படையில் தாம்.

பல்வேறு துறைகளுள் வேளாண்துறையும் மருத்துவத்துறையும் தலையாய சிறப்புடையவை. வாழ்க்கைக்கு அடிப்படையானவை. அவ்வகையில் உணவே மருந்தாகவும்– மருந்தே உணவாவும் அமைகின்றன. இறைவனைப் பிறவிப் பிணி நீக்கும் மருத்துவன் என்பர்.

அம்முறையில் உயிரினங்களின் உடம்பையும் சிறப்பாக மக்கள் புலன்களையும், மனத்தையும், சிந்தையையும் மருந்து என்பர். நோய் நாடி, நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி மருந்துகளை ஆக்கம் செய்பவர், வழங்குபவர், துணைபுரிவோர், மருத்துவர் எனப்படுவார். அத்தொழிலை மருத்துவம் என வழங்குவர்.

மருத்துவம் மருந்து மருத்துவம், அறுவை மருத்துவம் வாயுரை மருத்துவம் என வகைப்படும். மாந்திரீகத்தையும் மருத்துவத்தில் அடக்கிக் கூறுவர்.

உடம்பின் பிறப்பொடு உடன் தோன்றி அகவுடம்பு புற உடம்புகளுக்குப் பிணியையும் நோயையும் தருவது நோய். அது உடம்போடு ஒன்றி உடம்பு மடியும்போது மடிவது. மனத்தையும் சிந்தனையையும் பற்றியநோய்கள் இடையிடையே தோன்றித் தக்க மருந்துகளால் நீங்கும் அறியாமை மடமை முதலிய நோய்கள் நற்கல்வி கேள்விகளால் நீங்கும். பிறவி நோய் மெய்ஞ்ஞானத்தால் நீங்கும். பசி தாகம் முதலிய உடல் நோய் நல்ல உணவுகளாலும் சோர்வு களைப்பு முதலியவை உறக்கத்தாலும் நீங்கும்.

கூடா ஒழுக்கம் ஒவ்வா உணவு முதலியவற்றாலும் வாதம் பித்தம் சிலேட்டுமம் என்னும் முக்குற்றங்களாலும் இயற்கைச் சீற்றத்தாலும் தொற்றுக்களாலும் ஏற்படும் நோய்கள் தாவர மூலிகைகளாலும் பக்குவப்படுத்திய தாதுப் பொருள்களாலும் தூயநீர் காற்றுக்களாலும் நீங்கும். அம்மருந்துகளின் மூலப்பொருள்களைக் குறிக்கும் சொற்கள் யாவும் கலைச்சொற்கள் எனப்படும். நோயை ஆராயும் செயல்களும் மருந்துகளைத் தயாரிக்கும் தொழில்களைக் குறிக்கும் சொற்களும் கலைச் சொற்களுள் அடங்கும்.

மருத்துவர்கள் சிறப்பாக வழங்கும் மருத்துவம் பற்றிய சொற்களை மருத்துவக் கலைச் சொற்கள் என்பது மரபு.

உதாரணமாக துகளாகத் தயாரிக்கப்படும் மருந்துகளைச் சூரணம் என்பதும் எரித்துச் சாம்பலாக்கப்படுவனவற்றைப் பற்பம், சுண்ணம், செந்தூரம் என்பதும் வேக வைத்து அரைத்துத் தயாரிக்கப்படுவதை, குழம்பு, இலேகியம் என்பதும் மருந்து கலந்து காய்ச்சிய நீர் முதலியவற்றைக் கியாழம் தைலம் என்பதும் கலைச் சொற்களாகும். இக்கலைச் சொற்கள் யாவும் அறிவு நுட்பமும் கருத்தாழமும் உடையனவாகும். மருத்துவத்துறைக்கே சிறப்பாக உரியவையாகும்.

# பாற்கர சேதுபதி நான்மணிமாலை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ஆசிரியர் யாழ்நல்லூர் உடுப்பிட்டி சிவசம்புப் புலவர்,
உரைவிளக்கம் இரா. சதாசிவம்
செந்தமிழ் ஆசிரியர்.

**(6) அகவல்**

*"ஆய்வது புனித வாகமக் கலையே*
*யீவது போனக மிரணியங் கலையே*
*யின்புறப் புரப்ப தெழில்வளத் தேவையே*
*யன்புறப் பணிவ தற்களத் தேவையே*
*யணிவ துருத்திர னக்கப்பணியே*
*தணிவறப் புரிவது தளித்திருப் பணியே*
*மனமுறச் செபிப்பது மந்திர மைந்தே*
*தினமுற வவிப்பது தெறும்புல மைந்தே*
*பூசுவ தமல புண்ணிய சாந்தமே*
*யேசற வணிவ தினியமெய்ச் சாந்தமே*
*சூற்கரு முகிலெனத் துலங்கும்*
*பாற்கர சேது பதிமா தவனே."*

நம் பாற்கர சேதுபதி தவ ஒழுக்கமும் கல்வி கேள்வியும் உடைய சான்றோர். ஒருமுறை சென்னைக்குச் சென்று விட்டுத் திருப்பாதிரிப் புலியூரில் ஞானியார் சுவாமிகளைச் சந்தித்தார் என அறிகிறோம். இவருடைய தலைமையில் ஞானியார் அரிய உரை நிகழத்தியதாகவும் கல்விக் கழகம் ஒன்று நிறுவ நம்பாட்டுடைத் தலைவரை வற்புறுத்தியதாகவும் அறிகிறோம். ஞானியார் சுவாமிகளாலும் விரும்பிப் போற்றப்பட்டவர் நம் பாற்கரசேதுபதி அவர்கள். இவருடைய மெய்ப்பொருட் கல்வியைப் பற்றிக் கூறும் புலவர், ஆய்வது புனித ஆகமக்கலையே என வலியுறுத்துகிறார்.

இவண் ஆகமம் என்பதைச் சான்றோர் கூற்றின் மூலம் விளக்க வேண்டும். "தமிழ் நெறியைத் தழுவி வட மொழியில்

எழுதப்பட்ட ஆகமங்களை ஒப்பத் தமிழில் முதல் ஆகமமாகத் தமது நூலைத் திருமூலர் அமைத்தார். இதனைச்சேக்கிழார் "தண்ணிலவார் சடையார் தாம்தந்த ஆகமப் பொருளை மண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால் தமிழ் வகுப்ப" எனக்குறிப்பிடுகிறார். ஆகமம் என்ற வடசொல்லுக்குத் தொன்று தொட்டு வரும்மரபின் வழிவருவது என்று பொருள். அப்பொருளுக்கு ஏற்பத் தமிழ் நாட்டில் தொன்று தொட்டு வரும் நெறியாகிய அன்பு நெறியின்மரபில், இறையன்பின் வெளிப்பாடாக, ஆடல்பாடல்நெறி திருமூலர் காலத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு படிநிலைக் கூறுபாடுகளை உடையதாக வளர்ந்திருந்தது. சைவ ஆகமங்கள் இந்நான்கையும் பாதங்களாகக் (பிரிவுகள்) கொண்டு சைவ நெறியை விளக்குவன என்பர். திருமூலர் தமது ஆகம நூலில் யோக பாதத்தை விரிவாகவும் ஏனைய மூன்றையும் பண்டைத் தமிழ் நெறியைத் தழுவிச் சுருக்கமாகவும் கூறுகின்றார்." ஆகமம் குறித்து திருமந்திர உரையாசிரியர் வணக்கத்திற்குரிய பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்கள் மேற்குறித்தவாறு விளக்குகின்றார்கள்.

ஆய்வு செய்வதற்குரிய விரிந்தபொருளை நம்பாட்டுடைத் தலைவர் தேர்ந்துள்ள நுட்பம் ஊன்றி உணரத்தக்கது. சிறியன சிந்தியாதான் எனப் பரம்பொருளாகிய இராமனைக் குறிப்பான் கம்பன். நம் பாற்கர சேதுபதியும் உயிர்க்கு உறுதியாகிய பொருளை சிந்திக்கும் இயல்புடையவர். நினைக்க மனத்துக்கு அமுதாக இருப்பவன் இறைவன்; ஆகையினால் எப்போதும் மனத்தைத் தூய்மைப்படுத்துகின்ற மெய்ப்பொருள் நூல்களையே கல்வி வல்லார்களுடன் ஆராய்ச்சி செய்வது இவர்க்கு இன்பம் தரும் கல்வியாகும். அதனால் ஆசிரியர் "ஆய்வது புனித ஆகமக் கலையே" என இவர் கல்விச் சிறப்பைப் போற்றுகின்றார்.

உயர் பிறப்பாளர்களின் பண்பு ஈகையாகும். பாற்கர சேதுபதியாட்சியில் அவருடைய ஆட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள நெடுஞ்சாலைகளில் அன்னசத்திரம் அமைத்து இராமேச்சுரமுடையாரை வழிபட வருபவர்களுக்கும், பசிப்பவர்களுக்கும் உணவு வழங்கி வந்தார். கலைஞர்களுக்கும்

புலவர்களுக்கும் பொன்னாலாகிய அணிகலன்களைப் பரிசாக அளித்துச் சிறப்பித்தார். மாம்பழக் கவிராயருக்கு பொன்னாலாகிய மாம்பழமும் பரிசுப் பொருள்களும் வழங்கிப் புகழ் பெற்றவர் நம் பாற்கர சேதுபதி. வறியவர்களுக்கு ஆடைகள் வழங்குவது இவர்கள் இயல்பு. கலைஞர்களுக்கும் புலவர்களுக்கும் பொன்னாடைகள் போர்த்தி மகிழ்வார். ஒருமுறை உ.வே. சாமிநாதய்யருக்கு இரண்டு சால்வைகள் போர்த்தியதாகவும் அவற்றில் ஒன்றை விற்று சீவக சிந்தாமணி பதிப்பிக்க வாங்கிய கடனைத் தீர்த்ததாகவும் அவருடைய வரலாறு கூறுகிறது. வரலாறு உணர்ந்த சிவசம்புப் புலவர், "ஈவது போனகம் இரணியம் கலையே" எனப் போற்றுகின்றார். (போனகம் – உணவு, இரணியம்–பொன்; கலை–ஆடை)

பாற்கர சேதுபதி மக்கள் நலம் காக்கும் நல்லரசாட்சி நடத்தும் குறிக்கோள் உடையவர்; இவரை ஒத்த அரசர்கள் இந்தியாவில் ஐநூற்று ஐம்பதுக்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் சிற்றின்பம் துய்த்தல், வேட்டையாடுதல் ஆங்கிலேய ஆட்சியில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு விருந்து பாராட்டல் போன்ற கேளிக்கைகளிலேயே வீண்பொழுது போக்கினர். நம் சேதுபதி அவர்களிலிருந்து வேறுபட்டு மக்களின்கலை, பண்பாடு, நாகரிகம், கல்வி, உழவுத்தொழில், கோயில் முதலான மக்கள் நலத்திட்டங்களை மேற்கொண்டு அவற்றின் மேம்பாட்டில் சிந்தையைச் செலுத்தினார். அதனால் மக்கள் இன்புற்றனர். இதனை "இன்புறப் புரப்பது எழில் வளத் தேவையே" எனக் குறிப்பிடுகிறார்.

பாற்கர சேதுபதி அரச குடும்பத்தில் பிறந்த முனிபுங்கவர். எப்போதும் திருவருள் சிந்தனையுடையவராக விளங்கினார். சிவனை வழிபடுவது அவர் வாழ்வு. திருநீலகண்டனாகிய இறைவனை அன்பினால் கசிந்து வழிபட்டுவந்தார். இறைவழிபாட்டுக்குகந்த மலர் அன்பு; அன்பு என்பது பல்கால் பயின்ற ஆர்வத்தால் விளைவது. சேதுபதிகள் வழிவழியாக இராமேச்சுரம், திருஉத்திர கோசமங்கை, திருப்பூவணம் காளையார் கோயில், திருவாடானை, நயினார்கோயில் போன்ற புண்ணியத்தலங்களைப் பாதுகாத்துப் பராமரித்துப் போற்றி வந்த பரம்பரையினர். உரிமையால் விளைந்த பக்தியும் அன்பும்

இவர்க்கு இயல்பாகும். அதனால் ஆசிரியர், அன்புறப்பணிவது அற்களத் தேவையே எனப்போற்றுகிறார் (அற்களம் – திருநீல கண்டம்)

சிவனுடைய மங்களச் சின்னம் திருநீறும் உருத்திராக்கமுமாகும். இவ்வரச குடும்பத்தினர் எப்போதும் திருவேடப் பொலிவுடன் விளங்குவர். இவர் தன்னாட்சியின் கீழ் உள்ள கோயில்களை மிக்க பக்திச் சிரத்தையுடன் போற்றிப் பாதுகாத்து வந்தார். ஒருமுறை திரு உத்திரகோச மங்கைக்கு வழிபடச் சென்றார். அப்போது மூர்த்தி அம்மனுடன் திருவீதி உலா வந்தார். அம்மனுக்குப் பொன்னாலாகிய அணிகலன் யாதுமின்றி எழுந்தருளிய காட்சி அரசருடைய உள்ளத்தில் ஆற்றாமை உணர்வை ஏற்படுத்தியது. உடனே தன்னருகில் இருந்த அரசியாரைப் பார்த்தார். கண்ணின் சொல்லி செவியின் நோக்கும் இறைமாட்சி புண்ணியத்தின் பாலது என்பர் சான்றோர். இப்பெரியாரின் உள்ளக்குறிப்பை அறிந்த அரசியார் தம்முடைமைபொதுவுடைமைஎன்பதுணர்ந்து தம் கழுத்தில் அணிந்திருந்தவை ரஅட்டியலை எடுத்து திருஉலா வந்த உத்தரகோச மங்கை நாயகிக்குச் சார்த்தி மகிழ்ந்தனர். திருக் கோயில்களின் குறைகளை அறிந்து திருத்தம் செய்து திருப்பணிகளை நிறைவு செய்வது இவ்வரசருக்கு மனநிறைவை அளித்தது; கோயில் பணியுடன் உயிர்க்கு உபகாரமான திருப்பணி உள்ளக் கமலத்தில் நமச்சி வாயமந்திரத்தியானமேயாகும். இறுதிக் காலத்தில் தனிமையில் கல்லிடைக் குறிச்சித் திருவாவடுதுறை மடத்தில் மனம் ஒன்றிய தியானத்தில் திளைத்தார் என்று அவருடைய வரலாறு கூறுகின்றது.

நாளும் விழிப்புடன் இருந்து ஐம்புலன்களை நெறியில் நிறுத்தி ஒழுக்கம் காத்து தவநெறி நின்ற வாழ்வு இவருடையது. பொறிவாயில் ஐந்தவித்தல், பொய் தீர் ஒழுக்க நெறி நிற்றல் இவையே இறை நெறியாகும். அதனை உணர்ந்த சிவசம்புப்புலவர், பாற்கர சேதுபதி அத்தகைய அருள்நெறி நின்ற அருளாளர் என்பதைக் கற்போர் உள்ளம் கொள்ள, அடங்காப் புலனை நாளும் நெறியில் நிறுத்தி வாழ்ந்த பாற்கர சேதுபதி "தினமுற அவிப்பது தெறும்புலம் ஐந்தே" என அறிவுறுத்துகிறார்.

சைவர்களுக்கு மந்திரமும் தந்திரமும் மருந்துமாகி அகப்புற

மலம் நீக்கிப் புண்ணியப் பேற்றை அளிப்பது திருநீறே; பாற்கர சேதுபதி திருநீறு அணிந்து மணம் கமழ சந்தனச் சாந்து பூசி மழைமுகில் எனக் காண்போர் உளம் மகிழத் தவநெறி போற்றி அருள் துலங்க விளங்குவார்.

இவ்வகவலில் சிவசம்புப் புலவர் பாட்டுடைத் தலைவரின் அரச மாண்பையும் தவநெறி ஒழுக்கத்தையும் ஒருசேர ஒடுத்துரைக்கின்றார். அரசச் செல்வத்தைத் திருக்கோயில் பணிக்கும் அகத்தை அருள்நெறி விளங்க இறைவன் இருக்கும் கோயிலாகவும் அமைத்துக் கொண்டு வாழ்வை ஒரு தவமாக மாற்றிய புண்ணிய வாழ்வுடையவராகப் பாற்கர சேதுபதி விளங்கினார் என்பது தெளிவாகும்.

**(5) *வெண்பா***

*"மாதவமுன் செய்தமட்டே வாய்க்கு நுகர்ச்சியென*
*வேதமிலார் சொற்றதுமெய் யென்றுணர்ந்தேம் - பூதரவின்*
*னாதனடி பூசிக்கு நம்பியருட் பாற்கரனைக்*
*காதலுறக் கண்ணினாற் கண்டு".*

குற்றமில் சான்றோர் இவருடைய பெருவாழ்வைக் காணுந்தோறும் இவர் செய்த தவத்தின் பெருமையை நினைந்து போற்றுவர். தாம் செய்த தவத்தளவேயாகும் தாம் பெற்ற செல்வமும் இன்ப நுகர்ச்சியும் என்பார் சான்றோர். சான்றோர் கூறும் இக்கூற்று இச்சேதுபதி அரசர் வாழ்வில் கண்டோம் என்று ஆசிரியர் போற்றுகின்றார். இறைவனுடைய திருவடியை வழிபடும் அன்பர் பேற்றைப் பாற்கர சேதுபதி வாழ்வில் கண்டோம் எனக் கண்டவர் அனைவரும் பாற்கர சேதுபதி மீது காதல் மீக் கூர்ந்து அவரிடத்துப் பேரன்பு பாராட்டுவர். காண்போர் கண்கள் அவரை காதலிக்கும் என உள்ளத்து உணர்வைக் கண்ணின் மேலேற்றி உரைக்கும் இலக்கிய நயம் இன்புறத்தக்கது. நாதன் அடிபூசிக்கும் நம்பி என்பது சைவ உலகில் சுந்தரமூர்த்தி நாயனாரைக் குறிக்கும்; சுந்தரனை ஒத்த அருளும் பக்திச் செல்வமும் உடையவர் பாற்கர சேதுபதி என்பது குறிப்பு.

**(6) கலித்துறை**

*“கண்ணா யிரத்தின னாட்டுப் புலவர் கனிந்தசுவைத்*
*தண்ணா ரமுதமுண் டுங்கவி பாடுந் தகையுற்றிலர்*
*மண்ணாளும் பாற்கர சாமிதன் னாட்டினின் வான்புலவ*
*ரெண்ணா ரமுத கவிபாடக் கண்டன ரேவருமே”*

தேவர் நாட்டுப் புலவர் அமுதம் உண்டும் கவிபாடிற்றிலர்; இந்திரன் முனிவர் சாபத்தினால் ஆயிரம் கண்ணுடையவனாக அவமானம் அடைந்தான்; அவன் நாட்டின் தலைவனாக இருந்தும் நெறி நிற்காத குற்றத்தால் முனிவருடைய கோபசாபத்திற்கு ஆளானான். அவன் நாட்டுத் தேவர் அமுதும் தமிழமுதுக்கு ஈடாகாது. பாற்கர சேதுபதி ஒழுக்கமும் அருளும் கல்வியும் கலையும் நிறைந்த பண்பாளன்; அவன் நாட்டுப் புலவரும் தேவர் அமுதம் இன்றியும் இன்கவியமுதம் அளித்து மகிழும் பெரு வாழ்வுடையவர்கள் எனப் பாற்கர சேதுபதி நாட்டுச் சிறப்பை ஆசிரியர் கற்பனை நயமுற எடுத்துரைக்கின்றார். தமிழ்க் கவி அமுதம் அளிக்கும் புலவர்கள் மேல் உலகத்துத் தேவரினும் உயர்ந்தவர்கள் என்பதை வான் புலவர் என்றும் அவர் வழங்கும் கவிச் சுவைத்தமிழமுதம் நுகர்ந்த தமிழ் மக்கள் வானவரினும் உயர்பதவி அடைவர் என்றும் எடுத்துரைப்பது உணரத்தக்கது.

**(7) விருத்தம்**

*“ஏவரும் பரவு மாய்தக்கண் ணிறையு*
*மிலங்கிலை வேலிளை யவனு*
*நாவரு மதுர கவிஞர்க்கே வலராய்*
*நயந்தவ ருளத்திடை நணிய*
*வோவரு குறைக ளுளவெலா மொழித்த*
*வுண்மையை யுணர்ந்துளை யெனப்பூ*
*மாவரு கனக நகரப்பாற் கரமா*
*மன்னநின் மன்றில்வந் தனமே.”* (எ)

(ஆய்தக் கண்இறை—முக்கண் பெருமான்—நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான்) தமிழகத்தில் வாழையடி வாழையாக மக்கள் சிவனையும் முருகனையும் வழிபட்டு வருகிறார்கள். மிகப்

பழங்காலத்தில் சிவ வழிபாடு பெருகி இருந்தது. தமிழகமெங்கும் சிவன் கோயில்கள் கலைக் கோயில்களாகவும் சமுதாயக் கூடமாகவும் இயங்கி வந்த சிறப்புடையன. இன்றும் அவற்றைப் பெருவழக்காக மக்கள் போற்றி வருவது வெள்ளிடை மலை; அச்சைவ வழிபாடு பிற்காலத்தில் முருக வழிபாடாகவும் இன்று பெருவழக்காக உள்ளது அனைவரும் அறிந்த செய்தியாகும்.

சிவனும் முருகனும் தன் அடியவர்களுக்கு அடியவனாகப் பணி செய்து தன்னடியவர்களைப் பெருமைப்படுத்தினான் என்பது வரலாறு. தேவார ஆசிரியர் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும் அவருடைய துணைவியார் பரவை நாச்சியாருக்கும் இடையில் ஏற்பட்ட ஊடலைத் தீர்த்து வைப்பான் திருவாரூர் வீதிகளில் பலமுறை காலில் மண் தோய நடந்து எய்த்தான் எனச் சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றில் நாம் பார்க்கிறோம்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களுடைய வேண்டுகோளுக்காக உப்பூரிக் குடிக்கிழார் மகன் உருத்திரசன்மன் என்னும் மூங்கைப் பிள்ளை இறையனார் களவியல் உரைக்குப் பொருள் இதுவெனக் காட்டியதாக களவியல் தமிழ்ச் சங்கவரலாற்றால் அறிகின்றோம். முருகனே தமிழ்ப் புலவர்பொருட்டு மூங்கையாய் அவதரித்தான் என்பர். தமிழ்ப் புலவர் நக்கீரருக்காகவும் முன்தோன்றிப் பூதங்களிடமிருந்து அடியவர்களை மீட்டான் எனத் திருவிளையாடற் புராணம் கூறும். இவற்றை நன்குணர்ந்த சிவசம்புப் புலவர் சிவனும் முருகனும் தமிழ்ப் புலவர்க்காக ஏவல்செய்தமையை பாற்கர சேதுபதிக்கு அறிவுறுத்துகிறார். தமிழ்ப் பாநலம் பெற விழைந்த சிவனும் முருகனும் தமிழ்ப் புலவர்களுக்கு ஏவல் கேட்டான் என்ற உண்மையை நீ பலகாலம் சிந்தித்துத் தமிழ்ப் புலவர்களை நெஞ்சில் வைத்துப் போற்றும் இயல்புடையவன் என்பதை என்போலும் புலவர்களும் நானும் அறிந்தமையால் திருமகளும் விரும்பும் உன்னுடைய பொன்னாட்டிற்கு உன்னைக் காண வந்தனம் எனப் புலமைச் சான்றோர் மாண்பைப் பாற்கர சேதுபதிக்கு எடுத்துரைக்கிறார். தமிழர்கள் வழிபடும் கடவுள் தமிழ்ப் புலவர்களுக்கு ஏவல் செய்பவன் என்பது தமிழ் மரபை

வலியுறுத்தியதாகும். தமிழ் மக்கள் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றும் மரபையும் குறிக்கோளையும் தாம் வழிபடும் கடவுள் மேல் ஏற்றிப் படைத்திருப்பது தமிழர்களுடைய வாழ்வு நெறியையும் குறிக்கோளையும் காட்டுவதாகும். அத்தகு மரபுக்குச் சொந்தக்காரனாகிய நீயும் தமிழ்ப் புலவர்கள் பெருமை அறிந்து பாராட்டுவாய் என்பது அறிந்தனம்; அதனால் யாம் உன்னை நாடி வந்தனம் எனச் சிவசம்புப் புலவர் தமிழர் வாழ்வு நெறியை முன்வைத்துக் கவிதை புனைந்துள்ளது, தமிழர் அனைவரும் சிந்தித்தற்குரியதாகும்.

அகவல் (8)

*"வந்தினி தாடுநர் மாசுக ளுளவெலாஞ்*
*சிந்துமெண் மூன்று தீர்த்தங் குலவிக்*
*காசியா னந்த கானங் கடுத்து*
*வீசியார் கலிக்கிளர் மேத்தியச் சேதுவு*
*மாணியங் கொருவனை மாறற நட்ட*
*வேணிமிர் தநுவரி யிராவணற் காதிய*
*வன்புறு பவப்பழி மாற்றிட நாட்டிய*
*வின்புறு குறிதிக ழிராமேச் சுரமுஞ்*
*சீலநீ டியமெய்த் தெய்வத் தொண்டர்வாழ்*
*கோலநீ டுத்தர கோச மங்கையுந்*
*தவநிலை மணிவா சகவடி கட்குச்*
*சிவநிலை காட்டிய திருப்பெருந் துறையு*
*மாகம மருட்பா வாய்ந்துள நெகிழ்வுறூஉம்*
*பாகமெய்த் தொண்டர்கள் பயிறிரு மடமும்*
*வறங்கூர் கருப்பினு மகிழ்ந்தெளி துதவு*
*மறங்கூர் தரும்பல வன்னசத் திரமும்*
*வேதியர் முதலா மேவிய பலதிறச்*
*சாதிக டவாவகை தங்கிய மனைகளும்*
*போதவை தவாதுளம் பொருந்துபு சிறார்பலர்*
*மேதகக் கற்றிடும் வித்தியா சாலையும்*
*வருந்திட வுறும்பிணி மாறிட வென்று*

*மருந்துக ளுதவும் வயித்திய சாலையும்*
*வாழையுங் கன்னலு மாவும் பனசமுந்*
*தாழையுங் கந்தியுந் தழைத்ததண் டலையு*
*வரியளி பண்செய மல்குதண் டேனாம்*
*பரிசி லுதவும் பனிமலர்ப் பொழிலு*
*மேலெழு மாதபம் வீட்டிட வழிதொறுஞ்*
*சாலவின் னிழறருந் தகைநிரைத் தருவு*
*மேதிக ளுளக்கலின் மிடனிமிர் வாளைகண்*
*மீதெழுந் துலாவரும் வியனிலைக் குளமுந்*
*திரைகிளர் வையையந் திருநதிப் பெருக்கி*
*னிரைகிளர் விளைவறா நெடுநீர்க் கழினியு*
*மின்னன பிறவு மியைந்ததென் னாட்டினின்*
*மன்னுபு குணபால் வாரியுங் குடபாற்*
*பழமைசான் மதுரையம் பதியிலோர் பாகமுங்*
*கிழமைசால் வடபாற் கிளர்ந்தசோ ணாடுந்*
*தெனாதினில் வளந்திகழ் திருநெல் வேலியுந்*
*தனாதுபே ரெல்லையாய்த் தயங்கிட நின்று*
*சயந்திகழ் தண்டமிழ்த் தலைநா டாகி*
*நயந்திக ழிராம நாத புரத்தி*
*னிரணிய கர்ப்ப யாசி ரவிகுல*
*முத்து விசய ரகுநாத பாற்கர*
*சாமி சேது பதிமகா ராசா*
*வினிதர செய்திவீற் றிருப்ப*
*நனிமகிழ் வெய்தினர் நரருமும் பருமே."*

சிவசம்புப்புலவர் நாட்டுச் சிறப்பை இப்பாடலின்கண் விளக்குகின்றார். முதற்பகுதியில் சேது நாட்டின் அருள் நலம் கனிந்த வாழ்வையும் பிற்பகுதியில் இயற்கை நலம் கனிந்த வாழ்வையும் நிரல்பட எடுத்துரைக்கின்றார்.

முதற்கண் சேதுநாடு என்ற பெயர் விளக்கம் பெற்ற சேது தீர்த்தச் சிறப்பை எடுத்துரைக்கிறார். சேதுவும் இமயமும் இயற்கையின் கொடையாகும். இமயத்தை ஒத்த சிறப்புடையது சேது

தீர்த்தம். இமயம், காசி முதலான தீர்த்தங்களில் நீராடினாலும் சேதுவில் நீராடினால்தான் தீர்த்தயாத்திரை முற்றுப்பெறும். தேகயாத்திரையை நிறைவு செய்வதற்குள் இப்பரத கண்டத்தில் உள்ளவர்கள் இராமேச்சுரம் வந்து சேதுதீர்த்தம் ஆடி இப்பிறப்பு இறப்பின் வந்த குற்றங்களைக் கழுவிக்கொள்ள விரும்புகிறார்கள். இப்பரத கண்டத்தவர்கள் இராமேச்சுரத்தையும் சேதுதீர்த்தத்தையும் புண்ணியப் பேறாகக் கருதிப் போற்றி வருகிறார்கள். இராமேச்சுரத்தில் சேதுதீர்த்தம், அக்கினி தீர்த்தம், மற்றும் கோயிலுக்குள் உள்ள 22 கிணறுகளில் நீராடும் தீர்த்தம் ஆக 24 தீர்த்தங்களில் நீராடி இன்புறுவது இன்றும் மக்களிடையே பெருவழக்காகஉள்ளது. இச்செய்திகளை ஆசிரியர்,

*"வந்தினிது ஆடுநர் மாசுக ளுளவெலாஞ்*
*சிந்துமெண் மூன்று தீர்த்தங் குலவிக்*
*காசியா னந்த கானங் கடுத்து*
*வீசியார் கலிக்கிளர் மேத்தியச் சேதுவும்"*

எனப் போற்றுகிறார். இராம ராவண யுத்தம் பதினெட்டு மாதம் நடந்து முடிந்தபின்பு இராவணன் முதலான பலரையும்கொன்ற பாவப் பழிநீங்க இராமபிரான் கோயில் அமைத்து தீர்த்தமாடி வழிபட்ட இன்புறு குறிகளும் நிலைபெற்றது இராமேச்சுரம். சேது நாட்டின் புகழ்மிக்க கோயில் தளம் இராமேச்சுரம்; அக்கோயிலின்கண் அமைந்துள்ள சிற்பங்கள் ஓவியங்கள் மற்றும் முத்துராமலிங்க சேதுபதி கட்டிய மூன்றாம் கோயில் சுற்றுக் கூரை வேய்ந்த நடைபாதை இன்றும் தமிழகத்துக் கட்டிட மாண்புக்கு சான்றாக நின்று உலகத்துச் சுற்றுலாப் பயணிகளை வியப்பில் ஆழ்த்துகின்றது. சேதுதீர்த்தம் ஆட இந்தியா முழுவதுமிருந்து வரும் வழிபடு புண்ணியர்களும் உலகமுழுவதுமிருந்து வரும் அருள் நாட்டமுடையவர்களும் கலை நாட்டமுடையவர்களும் ஒருசேரக் கண்டுகளிப்பது சேதுவும் இராமேச்சுரமுமாகும். அதனை முதற்கண் சிவ சம்புப் புலவர் இராமனுடைய இராவணயுத்தத்துடன் இணைத்துப் பேசுவது அவருடைய புராண இதிகாச நாட்டத்தை காட்டுவதாகும்.

சேதுநாட்டின் தனிப் பெருஞ்சிறப்புடைய தளம் சைவ சமய ஆசிரியர் நால்வருள் ஒருவராகிய திருவாசகம் அருளிய மணிவாசகர் தவநிலை எய்திய சிறப்புடைய உத்தரகோச மங்கையாகும். உத்தரகோச மங்கையில் மணிவாசகர் நீத்தல் விண்ணப்பம் என்ற பகுதியில் ஐம்பது பாடல்களில் பொறிவாயல் ஐந்தவித்தல் வேண்டியும் ஐம்புலவாசனையுள் அழுந்திவிடாமல் அதிலிருந்து நீந்திக் கரைசேர இறைவனுடைய திருவருளை வேண்டியும் விண்ணப்பம் செய்கிறார். மணிவாசகர் தவநிலை வேண்டியது உத்தர கோச மங்கையேயாகும். அடுத்து மணிவாசகருக்கு சிவநிலை காட்டியது திருப்பெருந்துறையாகிய புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆவுடையார் கோயிலாகும். இராமேச்சுரம், திரு உத்தரகோசமங்கை, திருப்பெருந்துறை ஆகிய பதிகள் தமிழ் வரலாற்றில் சிறப்பிடம் பெறுபவை. 19ஆம் நூற்றாண்டில் பெரும்புகழ்பெற்ற மகாகவிமகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருப் பெருந்துறைப் புராணம் இயற்றி அத்தளத்தில் அரங்கேற்றினார்கள். நாயன்மார்கள் பழங்காலத்தில் ஊர் ஊராகச் சென்று இசைத் தமிழ்ப் பாக்கள் பாடி தமிழிசை முழக்கம் செய்தது போல மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையும் பற்பல தளங்களுக்குத் தள புராணம் பாடி தமிழ் வளர்த்தார்கள் என்பது ஈண்டு நினைவு கூறத்தக்கது. இது போன்ற பல புண்ணியப்பகுதிகள் நிறைந்தது சேதுநாடு எனச் சேதுநாட்டுத் தளங்களைக் கூறிய சிவசம்புப் புலவர் அங்கு வாழ்கின்ற மக்களுடைய அருள் நாட்டத்தைத் தொடர்ந்து எடுத்துரைக்கிறார்.

***மடம் :***

தவப் பயிற்சி மேற்கொள்பவர்கள், துறவிகள் தங்கும் இடம் மடம்; அவர்கள் ஆகமங்கள், அருட் பாடல்களைப் பயின்று தவ ஒழுக்கம் காத்து வாழ்வர். அத்தகைய மடங்களையும் ஒழுக்க சீலர்களையும் தாம் பார்த்ததாக உ.வே.சா. தம்முடைய வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுகின்றார். அதனையே சிவசம்புப்புலவர்,

*“ ஆகமம் அருட்பா ஆய்ந்து உள நெகிழ்வு றூஉம்*
*பாக மெய்த் தொண்டர்கள் பயில் திருமடம்”*

எனக் குறிப்பிடுகிறார்.

மழையின்றி பூமி விளையாது மக்கள் வறுமையுற்ற காலத்து மக்களைப் பாதுகாக்க அரசர் தம் கடமையுணர்ந்து போற்றி அமைத்த அன்னச்சத்திரங்களும் சேது நாட்டில் அறநெறி உணர்ந்த மக்கள் நல அரசால் பாதுகாக்கப்பட்டு வந்தன.

தமிழகத்தில் மக்கள் தம்தம் வாழ்க்கைமுறைகளுக்கு ஏற்பக் குடிகளை வகுத்துத் தொகுத்துத் தனித்தனிச் சேரி அமைப்புகளாக வாழ்ந்து வந்தனர் அதனால் தமிழ்நாட்டில் பார்ப்பனச் சேரி முதலான சேரிகள் விளங்கின என்ற வரலாற்றுச் செய்தியையும் புலவர் பதிவு செய்துள்ளனர். புறநானூற்றிலும் இத்தகைய முறைமை பேசப்பட்டுள்ளது.

செற்றமும் கலாமும் நீக்கிய நூலறி புலவர் பலர் பட்டி மண்டபத்துப் பங்கறிந்து ஏறி கேட்கும் மக்கள் உள்ளம் கொள்ளும் வகையில் மெய்ப்பொருளை எடுத்துரைக்கவும் சிறார் பலர் மேன்மையுறுதற் பொருட்டுக் கற்பித்தல் வல்லார் மிக்கக் கல்வி நிலையங்களும் நிறைந்து சேதுநாடு கல்வியில் சிறந்த காஞ்சிபோலச் சிறப்புற்று விளங்கியது.

துன்புறுத்தும் உடற்பிணி நீங்குதற் பொருட்டு மருந்துகளை நோயறிந்து உதவும் மருத்துவசாலைகளும் சேதுநாட்டில் அரசர்களால் பராமரிக்கப்பட்டு வந்தன. இதுவரைச் சேதுநாட்டின் சமயவரலாற்றையும், சான்றோர் வரலாற்றையும் அரசியல் சமூக நிலைகளையும் விளக்கிய புலவர் இனிச் சேதுநாட்டின் இயற்கை எழில் வளத்தை எடுத்து இயம்புகிறார்.

**தண்டலைவளம் :**

சேதுநாட்டு உழவர்கள் வையை என்னும் பொய்யாக் குலக்கொடி வளம் கொழிக்க கழனிகளும் சோலைகளும் எழில் காட்ட வளம் சேர்ப்பவர்கள். வாழையும் கரும்பும் மாமரங்களும்

பலாமரங்களும் தென்னைமரங்களும் கமுகு மரங்களும் இயற்கையழகு காட்டச் சேதுநாடு நிலம் என்னும் நல்லாள் பச்சைப் புடவை கட்டியது போலக் கண்டார் உள்ளம் கவரும் எழில் பெற்று விளங்கியது என உழவர் செயல் திறம் பகர்கின்றார்.

சோலைகள் பூத்துக் குலுங்குகின்றன; தேன் உண்டு வண்டுகள் பண்ணிசைக்கின்றன. தேன் சிந்தும் மலர்கள் நிறைந்து பொழில் மணம் கூட்டுகின்றன; நிழல் குளிரூட்டுகின்றன.

சேதுநாடு புண்ணிய தீர்த்தங்களும் கோயில்களும் நிறைந்த புண்ணியபூமி. இயற்கை உழவர்களின் முயற்சியால் வளம் கொழித்து வேளாண் செல்வம் மிகுந்து செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்துள்ளது. மக்கள் பரதகண்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் இத்திருநாட்டிற்கு தளயாத்திரை தீர்த்தயாத்திரையென வந்தவண்ணம் உள்ளனர். வாணிகத்தின் பொருட்டு பல்வேறு பகுதியினரும் இத்திரு நாட்டுக்கு இடையறவு இன்றி வந்தவண்ணம்ம உள்ளனர். அக்காலத்தில் இப்போது உள்ளதுபோல இரயில், பேருந்து போன்ற போக்குவரத்து வசதி கிடையாது. மக்கள் மாட்டுவண்டிகளையே நம்பிப் பயணம் செய்ய வேண்டும் சரக்குகளை ஏற்றிச் செல்ல வேண்டும். அதனால் ஆலமரம் போன்ற நிழல் தரும் மரங்களை நெடுஞ்சாலையெங்கும் நட்டுப் பேணிப்பாதுகாத்து வெயிலுக்குக் குடை நிழல்போல வழிச் செலவின் துன்பம் நீக்கி இன்பச் செலவாக்கினர். ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்புவரை மதுரையிலிருந்தும் பிறபகுதிகளிலிருந்தும் இராமநாதபுரத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலைகளில் இடையீடு இன்றி முதிர்ந்த ஆலமரங்களைப் பார்க்க முடிந்தது. காலப்போக்கில் சாலைப்போக்குவரத்து இரயில் பேருந்துத் தடங்களாக மாறியதால் மரங்கள் பேணுதல் இன்றி அழிந்தன. இப்போது நான்கு வழித்தடங்களாக மாற்றம் பெறுவதால் ஒட்டுமொத்தமாக மரங்கள் அழிந்து வருவது நெடிது நினைந்து இரங்கத் தக்கதாகும்.

**குளம் :**

நீரைத் தேக்கிக் குளங்களைப் பாதுகாப்பது நீரைப் பாதுகாக்கும் நெறியாகும். சிறுசிறு குளங்களும் நீர்நிலைகளும் நீர் வளத்தைப் பெருக்கி மண்ணில் மக்கள் வாழ்க்கையை இன்புறச் செய்யும் என்பது ஊர் அறிந்த உண்மையாகும். ஆனால் இன்று பேரணைகள் இயற்கையின் சமநிலைச் சீர்கேட்டிற்கும் எளிய மக்கள் வாழ்க்கைச் சிதைவுக்கும் காரணம் என்பதை அரசியலார் அறிந்திலர். புலவர் குளங்களில் எருமைகள் படுத்து நனைந்து சிறிதுசிறிது அசைந்து அசைந்து மகிழ்வது அவற்றுக்கு இயற்கை தரும் இன்பம். அக்குளத்தில் உள்ள வாளை மீன்கள் எருமைகள் படுத்துச் சோம்பிக் கிடப்பதைப் பார்த்துத் துள்ளிப் பாய்ந்து விளையாடும் நாடகக் காட்சியைப் படைக்கின்றார். பெரியவர்கள் தங்கள் வீட்டுக்கு வந்தால் குழந்தைகள் விளையாடி மகிழ்ந்து அவர்களை மகிழ்விப்பதுபோல வாளைமீன்கள் எருமைகளுக்கு விளையாட்டு விருந்து படைக்கின்றன.

சேதுநாட்டில் வையையாறு தெற்குநோக்கி ஓடுகின்றது. தென்னாடு வையை புரப்பதால் விளைவறாது ஓங்கி வளர்ந்து செழித்த கழனிகள் அலைஅலையாக ஒயாதவிளைச்சலை வழங்குகின்றன. இத்தகைய சேதுநாட்டிற்குக் கிழக்கு எல்லையாகக் கடலும் மேற்கு எல்லையாக பழமை சான்ற மதுரை மாநகரும் வடபால் உரிமையுடைய உறவினர் வாழும் வளம் கிளர் சோழநாடும் தெற்கே வளம் திகழ் திருநெல்வேலிச் சீமையும் எல்லைகளாக விளங்கச் சேதுநாடு விரிந்து பரந்த நாடாகப் புகழ்பெற்று விளங்குகிறது எனச் சேதுநாட்டு எல்லையைக் கற்பவர் உள்ளம் கொள்ள எடுத்துரைக்கின்றார். இவ்வெல்லைக்குட்பட்ட சேதுநாடு தமிழ் கூறும் நல்லுலகிற்கு தமிழ்கெழு தண்டமிழ் வளம் பேணுவதால் தலைமை நாடாக விளங்குகிறது எனப் புலவர் தமிழின் ஏற்றம் பேணும் சிறப்புச் சேதுநாட்டிற்கு வாழையடி வாழையாகப் பெருமை சேர்க்கிறது என நாட்டின் ஏற்றம் தமிழின் ஏற்றம் என எடுத்துரைக்கின்றார். தமிழ்

புரக்கும் சேரநாட்டின் தலைநகர் இராமநாதபுரத்தில் தமிழ்த்தாய் மணிவயிறு வாய்க்க இரவிகுல முத்து விசயரகுநாத பாற்கரசாமி சேதுபதி மகாராசா பிறந்து முறையின் அரசெய்தி இனிது வீற்றிருக்க உலகமும் உம்பரும் இன்புறுகின்றனர் எனப் பாற்கர சேதுபதி மாண்பை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். ஈண்டு ஆசிரியர் பாற்கர சேதுபதியை நீண்ட அடைமொழிகளால் போற்றுவது குடிச்சிறப்பை விளக்குவதாகக் கொள்ளலாம். ஆனால் சாமி எனக் குறிப்பிடுவது ஆசிரியர் பாற்கர சேதுபதி மீது கொண்டுள்ள அன்பு மீக்கூர்ந்த பக்தியையும் பாற்கர சேதுபதியின் தெய்வத்தன்மை வாய்ந்த குணச் சிறப்பையும் காட்டுவதாகும். அன்பின் வெளிப்பாடு உணரத்தக்கது. இதனை அபிதான சிந்தாமணி ஆசிரியர் சிங்காரவேல் முதலியார் தம்முன்னுரையில் பாண்டித்துரைத் தேவரைக் குறிப்பிடும் இரண்டு இடங்களிலும் பாண்டித்துரைச் சாமித் தேவர் என்று குறிப்பிடுவது கொண்டு உணரலாம். அபிதான சிந்தாமணி ஆசிரியர் நூலை எழுதி முடித்தபின்பு அதனை அச்சிடுவதற்கு யாரும் உதவாத நிலையில் மன உலைச்சல் உற்று வருந்திய நாளில் வந்து உதவிய அருஞ்செயலைப் போற்றுவான் ஆசிரியர் தேவரைக் குறிப்பிடும் இடங்களில் எல்லாம் சாமி என்று அழைப்பதொன்றும் வியப்பில்லை. அந்த வகையில் ஆசிரியர் பாற்கர சேதுபதியின் தகைமை யறிந்து பாற்கர சாமி எனப் போற்றுவது சாலப் பொருந்துவதே யாகும்.

கடவுளை வாழ்த்துதல் உயிர்ப்பண்பாக உள்ளது போல நீத்தார் பெருமையை உணர்ந்து போற்றுதல் உயிர்க்கு இன்பம் தரும். ஆகையால் திருவள்ளுவர் பாயிரத்துள் இன்றியமையாதவற்றுள் ஒன்றாக நீத்தார் பெருமையை எடுத்துரைத்துள்ளார். சிவசம்புப் புலவரும் ஒரு நாட்டின் பெருமிதங்களைஉணர்த்தும் சிறப்புக்களை எடுத்துரைக்கும்போது துறவிகள் வாழும் மடங்களை

*"ஆகம அருட்பா ஆய்ந்துளம் நெகிழ்வுறூஉம்*
*பாகமெய்த் தொண்டர்கள் பயில்திருமடமும்"*

எனக் குறிப்பிடுவது மனம் கொள்ளத்தக்கதாகும்.

**(9) *வெண்பா***

> *"உம்பரிடைப் பாற்கரன்றா னோவாத வெஞ்சுடரோ*
> *னிம்பரிடைப் பாற்கரன்றண் ணென்சுடரோன் - பம்பும்*
> *புறவிருளைப் போக்குமவன் பொங்கவகத் தூர்கார்*
> *நிறவிருளைப் போக்குமிவ னின்று."*

வானில் திரியும் சூரியன் வெப்பக்கதிர்களைப் பரப்பி மண்ணில் உயிர்களை துன்புறுத்தும் இயல்பினன். மண்ணில் வள்ளல் பாற்கர சேதுபதி குளிர்ந்த சுடரோன் நிலவினைப் போல இன்பம் பயப்பவன். சூரியனுக்கும் சேதுபதிக்கும் பாற்கரன் என்று பெயரில் ஒற்றுமை இருந்தாலும் செயலில் வேறுபாடு உண்டு.

கதிரவனும் நிலவும் புற இருளையே போக்கும் ஆற்றல் உடையவர்கள். வள்ளல் பாற்கரசேதுபதி அக ஒளி பெற்ற மெய்யுணர்வாளன். ஞானியர்களும் விரும்பும் மெய்ப்பொருள் காட்சியுடையவன். இவர் காலத்து வாழ்ந்த மெய்யுணர்வாளர்கள் பலரும் பேரன்பும் பெருமதிப்பும் கொண்டு போற்றும்படியான மெய்ஞ்ஞானம் பெற்றவர் பாற்கர சேதுபதி. இருபதாம் நூற்றாண்டில் மேலைநாடுகளும் கீழைநாடுகளும் வியந்து போற்றும்படியான மெய்ஞ்ஞான ஒளிபரப்பிய சுவாமி விவேகானந்தர் இப்பெரியாரின் குணநலங்களையும் மெய்யுணர்வு நாட்டத்தையும் தம்முடைய சொற்பொழிவுகளிலும் ஞான நூல்களிலும் போற்றியுரைத்துள்ளார். திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகள் பாற்கர சேதுபதி *தலைமையில் மெய்ப்பொருட் சொற்பொழிவுகள்* பல நிகழ்த்தியுள்ளார். இத்தகு பெரியோர்கள் வியந்துரைத்திருப்பது இவருடைய ஞானக் காட்சியின் உயர்நிலை கருதியேயாகும்.

பாற்கர சேதுபதி உள்முகச் சைவ மணியாவார். அகத்தே தெளிந்த ஞானமும் மெய்ப்பொருட் காட்சியுமுடையவர். பிறப்பு அறியாமையின் வடிவம்; திருவள்ளுவர் பிறப்பு என்னும் பேதமை என்பார்; யான் எனது என்னும் செருக்கு ஆணவ மலமாகும். அதனை ஆசிரியர் "பொங்க அகத்தூர் கார் நிற இருள்" என்கிறார்.

கார்நிற இருள் தன்னைக் காட்டும் பொருளைக் காட்டாது. அறியாமையாகிய இருள் தன்னையும் காட்டாது. மெய்ப் பொருளையும் காட்டாது என்பர் ஞானியர். நம் பாற்கர சேதுபதி அருள்நலமும் தவஒழுக்கமும் உடையவர் அதனால் தம்மையடைந்தார் புறவாழ்வின் துன்பத்தைப் போக்குவதோடு அவருடைய அகவிருளாகிய அறியாமையும் போக்கும் சான்றோன் என ஆசிரியர் பாற்கர சேதுபதியின் அருள் நலத்தையும் கல்வி நலத்தையும் உலகவர்க்கு எடுத்துரைக்கின்றார்.

**(10) கலித்துறை**

*"நின்றஞ்சமென்ன வடைபவர்க் கன்னை நெடிதுறமேற்*
*சென்றஞ் சவித்த வடியவர்க் காவி செழுந்தமிழ்க்கு*
*மன்றஞ் சகத்துக்குக் கற்பக மன்னர் மகுடமணி*
*குன்றஞ்சமான மெனுங்குணப்பாற்கரக்கொற்றவனே."*

பாற்கர சேதுபதி ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோன்; தமிழ் முழுதும் அறிந்த வலம்படுதிரிசில்; இயற்றமிழ் அறிஞன்; இசைத்தமிழ் சாகித்தியங்கள் படைத்த இசைக் கலைஞன்; செல்வத்துப் பயன்ஈதல் என்னும் கொள்கை மறவன்.

மன்னிய சீர் பாற்கரனாம் மாராசன்ஆகையினால் தன்னடைந்தார் துயரம் தீர்த்து அகம் மகிழ்வதில் தாய் போலும் இயல்பினன்; தாய் தன்னலம் கருதாது குழந்தைகள் நலத்தையே சிந்திப்பது போலப் பாற்கரசேதுபதியும் மக்கள் நலத்தையே சிந்திக்கும் இயல்பினன்.

இம்மை மறுமைகளின் ஏற்றத்தாழ்வுகளை உணர்ந்த சான்றோர் இம்மை வாழ்வில் எழுமைக்கும் வேண்டிய ஆக்கம் செய்துகொள்வர். சிற்றினம் ஒருமையில் எழுமைக்கும் புக்கு அழுந்தும் தீவினையுள்அழுந்தும். துறவிகள் நெடிது கற்ற கல்வி கேள்விகளாலும் சான்றோர் கூட்டுறவாலும் மெய்ம்மையுணர்ந்து ஐம்புலன்களையும் பொறிமேற் செல்லாது ஐந்தவித்தடங்கிய நெறி நிற்போர் ஆவர். அத்தகைய நீத்தார் பெருமை உணர்ந்து போற்றும் மரபில் வந்தவர் பாற்கர சேதுபதி. துறவிகளை உயிரினும் உயிராகப்

போற்றும் பண்பினர் சேதுபதி.

செந்தமிழுக்கு மன்றம்: வள்ளலார், எத்தை உனைப்பாடி மகிழ்ந்து இன்புறுவே செந்தமிழனை வளர்க்கின்றாய் என்பார்; பாற்கர சேதுபதி கல்வி வல்லார் சபையில் தமிழாய்ந்து திருவருள் இன்பத்தில் திளைத்தார். பாற்கர சேதுபதி நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தோற்றுவித்த பாண்டித்துரைத்தேவருக்கு உயிரினும் இனியதம்பியும் நண்பனுமாக விளங்கியவர். பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச் சங்கத்தைத் தொடங்குவதற்குரிய பொருளுதவி செய்தார். தன்னை ஒத்த மன்னர்களைத் தமிழ்ச் சங்கத்துக்குத் தொடர்ந்து உதவுமாறு வேண்டிப் பொருளுதவி பெற்றுத் தந்தார். இவருடைய வேண்டுகோளை ஏற்றுப் புதுக்கோட்டை அரசர் பெரும் பொருள் உதவி செய்தார். பிற மன்னர்களும் உதவினர்.

மதுரையில் தொடங்கிய நான்காம் தமிழ்ச் சங்கத்தின் தொடக்க விழாவுக்குப் பாற்கர சேதுபதி தம்பரிவாரங்களுடன் வருகை புரிந்து சிறப்பித்தார். தாமும் இயலிசை வல்லுநர் ஆகையால் இசைத்தமிழ் இயற்றமிழ் உரையாற்றிச் சிறப்பித்தார். உ.வே.சா. போன்ற பெரும்புலவர்களுக்குப் பொருளுதவிப் பாதுகாத்தார். பாற்கர சேதுபதி நவராத்திரி விழாவின்போது கலந்துகொண்ட உ.வே.சாவுக்கு இரண்டு பொன்னாடைகள் போர்த்திப் பொற்கிழி வழங்கினார். அதில் ஒரு பொன்னாடையை விற்று ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றாகிய சீவக சிந்தாமணியைப் பதிப்பிப்பதற்கு வாங்கிய கடனை அடைத்ததாக உ.வே.சா. தன் வாழ்க்கை வரலாற்றில் குறிப்பிடுகிறார்.

மகாவித்துவான் இரா. இராகவையங்கார் ஆற்றிவரும் தமிழ்ப் பணியின் மாண்புணர்ந்து அவருக்கு வாழ்நாள் பரியந்தம் தம் கருவூலத்திலிருந்து மாத நிவேதனம் வழங்க நிரந்தர ஆணை பிறப்பித்தார். பாற்கர சேதுபதி அரசவை ஒரு தமிழ் மன்றமாக விளங்கியது. தமிழாய்ந்த புலவருடன் கூடித் தமிழ்க் கூட்டுண்பதில் இன்பம் காணும் இயல்பினர் பாற்கரசேதுபதி. அதனால் சிவசம்புப் புலவர், செழுந்தமிழுக்கு மன்றம் என நம் பாற்கரசேதுபதியைப் போற்றுகின்றார். செவ்வியல் மொழி என அன்று போற்றியவர் நம் பாற்கர சேதுபதி.

கற்பகம் வேண்டுவார்க்கு வேண்டியாங்கு கொடுக்கும்

இயல்புடையது; நம் பாற்கரசாமியும் வேண்டும் அனைத்தையும் ஈயும் இயல்புடையவர். மன்னர் கூட்டத்தில் மன்னர்க்கு ஏற்றம் தரும் மகுட மணி போன்றவர். குணம் என்னும் குன்றேறி நின்ற பெரியார் இவர். சிவசம்புப் புலவர் பாற்கரசேதுபதி நான்மணிமாலையின் தொடக்கத்திலே சேதுபதியை அறிமுகம் செய்யும்போது மன்னிய சீர்ப் பாற்கரனாம் மாராசர் எனத் தோற்றுவாய் செய்திருப்பது எண்ணி இன்புறத்தக்கது. நிலை பேறுடைய குணங்களால் நிலைபேறுடைய புகழை ஈட்டியவர் பாற்கர சேதுபதி. வெள்ளிடை மலைபோல குணக்குன்றமாக பாற்கர சேதுபதி விளங்குகின்றார் என அவரின் சீரிய குண மாண்புகளை விளக்குகின்றார்.

**(11) விருத்தம்**

*"கொற்றவ னாய முத்துரா மலிங்கக்*
*குபேரனன் றுஞற்றிய குறைவி*
*னற்றவ முழுதுந் திரண்டுபாற் கரனா*
*நண்ணிய தென்னநா னாநூல்*
*கற்றவர் பலருங் கழறிடு முண்மைக்*
*கருத்தினைக் கனாவினி லேனுஞ்*
*சொற்றவ றாத பெருவித ரணவத்*
*துரையிடைத் துணிந்துகண் டனமே."*

தவத்தளவே யாகுமாம் தான் பெற்ற செல்வம் என்பர். இவன் தந்தை என்நோற்றான் கொல் என்னும் சொல் என்பார் திருவள்ளுவர். திருவள்ளுவரும் அவ்வையாரும் தவத்தின் வலிமையறிந்து போற்றும் செய்தி செல்விதின் உணரத்தக்கது. தவம் முழுதும் திரண்டு ஓர் உருப்பெற்றாங்கு பாற்கர சேதுபதியின் பெரும்பெயர்ப் பிறப்பு அமைந்தது எனப் போற்றுகிறார் ஆசிரியர். பாற்கர சேதுபதியின் தந்தையார் முத்துராமலிங்க சேதுபதி கவியரங்கேறிய புலவரும் புலவரைப் போற்றும் புரவலரும் ஆவார். திருவள்ளுவரும் திருக்குறளைத் தொடங்கும் போது கற்றதனால் ஆய பயன் என்கொல்? என்று ஒரு கேள்வி எழுப்பிக் கல்வியின் பயன் வாலறிவன் நற்றாள் தொழுவது என அறிவுறுத்துகின்றார். நற்றாள் என்பதற்கு நன்மை பயக்கும் திருவடி என உரை காண்பர்

ஆசிரியர் பரிமேலழகர். பெறக்கூடிய நன்மையுள் சிறந்தது அறிவறிந்த மக்கட் பேறேயாகும். நம் முத்துராமலிங்க சேதுபதி இயற்றிய அருந்தவமே பாற்கர சேதுபதி என்னும் சீராளன் பிறப்பாகும்; தவத்தால் நற்பிறப்பு வாய்க்கும்; ஈண்டு முத்துராமலிங்க சேதுபதி இயற்றிய தவமும் குபேரனை ஒத்த செல்வத்தை கொடுத்துச் சிவந்த தடக்கைகளால் ஈட்டிய அறமும் ஒன்றிணைந்து பாற்கர சேதுபதி பிறப்பு வாய்த்தது; அப்பிறப்புச் செந்தமிழுக்கு மன்றம்; குணத்துக்குக் குன்றம்; சான்றோர்க்குஉயிர் எனத் தமிழ் மண்ணை அணி செய்தது. இதனை நூல் அறிபுலவர் நுவலக்கேட்டனம் எனப் புலவர் கற்றவர் கூற்றாகக் கூறியிருக்கும் நயம் நினைக்கற்பாலது.

*"நிலத்தில் கிடந்தமை கால் காட்டும் காட்டும்*
*குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்"*

என்பது வள்ளுவர் வாக்கு. நம் பாற்கர சேதுபதியும் நினைவில் கூட தவறான சொற்களைப் பயிலாத நாவுடையவராக வாய்மை போற்றி வாழ்ந்தார். வாய்மை இவர்க்கு அமைந்தது குடிச் சிறப்பால் மட்டும் அன்று; அரிய கேள்வியும் அதனால் விளைந்த மெய்யுணர்வும் தந்த பெருவிதரணவம் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். (விதரணவம்—கல்வி கேள்வியால் விளைந்த அனுபவ ஞானம்) முறையாக நல்லாசிரியரிடம் பலகால் தொல்காப்பியம் முதலான பெருநூல்களை யாழ்ப்பாணம் நல்லூரில் பாடம் கேட்டவர் சிவசம்புப் புலவர். அத்தகைய கேள்வித் துணிவே இவ்வுண்மைகளை உற்று அறியும் வாய்ப்பைத் தமக்கு நல்கியதாகப் புலவர் கூறுவது உற்றுணரத்தக்கதாகும். ஆரவாரம் மிக்க அரசச் செல்வத்துக்கு நடுவே பாற்கரசேதுபதியின் அருங்குணங்கள் பலருக்கும் தெரியாது போகலாம். நம் புலவர் ஆன்றகல்வி நலம் வாய்க்கப் பெற்றவராதலின் இவ்வுண்மை துணிந்தனம் எனக் கூறுவது அறிதற்பாலது. சான்றோர் வரலாறு குணங்களின் மாண்பேயாகும்; குணங்களை அறியாது புற வேடங்களையே மக்கள் போற்றுவர்; நம்புலவர் புறத்தைப் புறந்தள்ளி உள்ளீட்டை நமக்குக் காட்டும் சிறப்பு எண்ணிப் போற்றுதற்குரிய பேறாகும்.

(தொடரும்)

# இலக்கியங்களின் வரையறையில் "கற்பு"

முனைவர் சு. குழந்தைவேல் பன்னீர்செல்வம்

தமிழிலக்கியத்தின் நெடுவழிப்பாதையில் ஒரு மைல்கல்லாக இருப்பது அகத்துறை இலக்கியம். இத்தகைய இலக்கியத்தைப் படைத்த புலவர்கள் காலத்தை வென்று நிற்பவர்கள். மேலை தேசத்து பண்பாட்டுப் புதுமையை மறக்காது ஏற்றுக்கொண்ட தமிழர்கள் அகத்துறை இலக்கியக் கோட்பாடுகளைத் தவறவிடவில்லை என்றே கூறலாம். இலக்கியம் ஓரின மக்களுக்காக மட்டும் படைப்பதுமில்லை வாழ்வதுமில்லை.

ஒரு கால ஓட்டத்தில் வாழும் மக்களுக்கு படைக்கப்பட்ட போது வாழ்ந்த இலக்கியம். அம்மக்கள் மறைந்த போதும் மறையாது என்றும் நிமிர்ந்து நிற்பது இலக்கியம். அவற்றில் ஒருவகைதான் அகத்துறை இலக்கியம். உலக மொழிகளிலே கூறப்படும் கருத்துக்கள் அம்மொழியின் செல்வாக்கினால் மதிப்புப் பெறுவதுண்டு. தனிமனித சிந்தனையாக அன்றி மனித சமூகத்தின் சிந்தனைகளை வெளிக் கொண்டுவரவும். பண்பாட்டு நெறிமுறைகளைப் படைத்தளிக்கவும் மொழி பயன்பட்டது. அத்தகைய மொழியாகிய தமிழின் தனிச்சிறப்பைக் கூறுகின்ற தமிழரின் 'கற்பு' நெறியைப் பற்றி இலக்கியங்கள் கூறுவதை இங்கே ஒரு சிற்றாய்வாகக் கொள்ளப்படுகிறது.

## *வாழ்வின் நோக்கம்*

பழந்தமிழர், சமுதாயத்தைப் பற்றிய கருத்துக்களைத் தாம் உருவாக்கிய இலக்கியங்களிலே கூறிச் சென்றுள்ளார். பண்டைய இதிகாசங்களும், தனிப்பாடல்களும், காவியங்களும், புராணங்களும் தனிமனித வாழ்வு நெறிகளையும் சமூக வாழ்வு நிலைகளையும் எடுத்துக் கூறியுள்ளன. மனித வாழ்க்கையின் நோக்கம் எது என்பதை அறிய மக்களின் இலக்கியங்கள் உதவுகின்றன. சங்கப் பாடல்களிலே

---

* **விரிவுரையாளர், கல்வியியல்துறை, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-23**

தனிமனித வாழ்வு விளக்கமாகக் கூறப்படுகின்றது ஆனால், அத்தனிமனித வாழ்வு பற்றிய குறிப்புகள், மனித சமூக அமைப்பிலே அக்காலகட்டத்திற் பெற்றிருந்த முக்கியத்துவத்தையும் அப்பாடல்கள் காட்டுகின்றன. குடும்ப நிலையிலே சிறப்பாக ஆணும் பெண்ணும் பெற்றிருந்த நிலையைச் சமூகப் பாடல்கள் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டியதும் அக்காலத்தின் தேவையாக இருந்திருக்க வேண்டும்.

ஆணும் பெண்ணுமாக ஒன்றிணைந்து 'குடும்பம்' என்ற அமைப்பை ஏற்படுத்தி வாழத் தொடங்கிய போது அவ்வமைப்புக்கான சில ஒழுங்கு முறைகளையும், திட்டமிட வேண்டியிருந்தது. ஒழுக்க நிலையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபாடற்ற விதிமுறைகளையே பந்தமிழர் பேணி வந்துள்ளனர். குடும்பம் என்ற அமைப்பின் நிலைபாட்டிற்குச் சில ஒழுக்கவிதிகள் வகுக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டன. சங்க இலக்கியத்தில் 'தலைவன்', 'மனையாள்' என்ற இரு சொற்கள் முறையே ஆணையும் பெண்ணையும் குறிக்கின்றன. ஊரன், நாடன், துறைவன் போன்ற சொற்கள் ஆணைக்குறிக்கும் சொற்களாகப் பல பாடல்களிலே வந்துள்ளன. பெண், வீட்டிலிருந்து குடும்ப அமைப்பினைப் பேணுபவளாகவும், ஆண் வெளியிலிருந்து பேணுபவனாகவும் குடும்ப நிலை இருந்ததை அறிய முடிகிறது. ஆணும் பெண்ணுமாக நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழ்க்கை நடத்தியபோது 'மனை' மனித வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றது.

### *மரபு*

உணவு, தேடல், இருப்பிடம் அமைத்தல் என்ற நிலை மட்டுமின்றி, வம்ச விருத்தியெனும் முக்கியமான அம்சமொன்றும் குடும்பம் என்ற அமைப்பிலே சில வரையறைகள் தோன்ற அவசியமாக இருந்தது. இக்காலத்தில் ஒருவனுக்கு ஒருத்தி, ஒருத்திக்கு ஒருவன் என்ற வரையறை ஏற்பட்டிருக்க வேண்டும். கணவன், மனைவி, மக்கள், உறவினர், நண்பர் என்ற நிலையில் அவரவரது கடமைகளும் பொறுப்புகளும் வகுக்கப்பட்டன.

விலங்கு – வாழ்விலிருந்து மனித வாழ்க்கை இப்புதிய கடமைகளாலும் பொறுப்புகளாலும் பகுத்தறிவினால் வேறுபட்டு சிறப்புப் பெற்றது. இவ்வாறு மனித வாழ்க்கைக்கு கற்பிக்கப்பட்ட நெறிகள் சமூகத்தின் பண்பாடாக நிலைபெற்றமைந்தன. நிலத்தைப் பண்படுத்தி விளைநிலமாக்கி பயன்பெற்றது போன்று மனிதனும் தனது வாழ்க்கை

நெறிமுறைகள் மரபுகளாகப் பேணப்பட்டன. அம்மரபுகளை மனித வாழ்க்கையின் நெறிப் பற்றிப் பாடியவர்கள் தமது பாடல்களில் குறிப்பிட்டனர். அவை இலக்கிய மரபுகளாக இன்றும் கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்தகைய இலக்கிய மரபுகளைப் பிற்காலத்தில் இலக்கியம் படைத்த புலவர்கள் எடுத்துத் தமது பாடல்களில் பாடினர். பழந்தமிழ்ப் புலவர்களாகிய சங்ககாலப் புலவர்கள் மனித வாழ்க்கைக்காகக் கற்பித்த நெறிகளை நுணுக்கமாக தமது பாடல்களிலே கூறியுள்ளனர். அவ்வாறு குறிப்பிட்டுச் சென்றவிடங்களில் 'கற்பும்' ஒன்று. பிற்காலப் புலவர்கள் பலர் கற்பு என்பதை சரியாக விளங்கிக் கொள்ளாமல் தவறான விளக்கங்களை கொடுத்துச் சென்றுள்ளனர்.

## *கற்பு - விளக்கம்*

"கற்பு" என்னும் சொல் சங்க இலக்கியங்களிலே பல இடங்களில் வந்துள்ளது. சமூக இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்த பலரும் இது பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளனர். பிற்கால இலக்கியங்களிலே 'கற்பு' என்பது மிகச் சுருங்கிய பொருளில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக கற்பு பெண்ணின் ஒழுக்கத்துடன் மட்டுமே சம்பந்தப்பட்டதாக இன்று பொருள் கொள்ளப்படுகின்றது. கற்பு என்ற சொல்லின் தோற்றப்பொருள் கற்பித்தபடி ஒழுகுதல் என்பதே. இதனையே சங்கப்புலவர்கள் இச்சொல்லைக் கையாளுகின்ற இடங்களில் நுணுக்கமாகக் கூறியுள்ளனர். 'இகலடுகற்பு', 'வெளிறில் கற்பு' என்னும் தொடர்கள் கற்பு என்பது கற்பித்தவை எனப் பொருள் தருவதற்குச் சிறந்த உதாரணங்களாகும். கற்பு என்பதற்கு ஔவையார் கூறுகின்ற விளக்கமும் இப்பொருளையே தருகின்றது. சங்க இலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியரும் கற்பு என்னவென்று விளக்குகிறார்.

*"மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்*
*இவைமுத லாகிய இயனெறி திரியாது*
*மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்*
*பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே"* (1)

என்று கற்பு பற்றி தொல்காப்பிய செய்யுளியல் சூத்திரம் கூறுகிறது.

பொருள் மரபு பற்றி விளக்குமிடத்தில்,

*"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்*
*கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்*
*கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"(2)*

என்ற இக்கருத்திற்கு இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் உரைகள் கொடுத்துள்ளனர். "கற்பென்று சொல்லப்படுவது கரணத்தொடு பொருந்திக் கொள்ளுதற்குரிய மரபினையுடைய கிழவன் கொடுத்தற்குரிய மரபினையுடையோர் கொடுப்பக் கொள்வது" என இளம்பூரணரும் கூறும் விளக்கம் தனிமனித வாழ்வில் குடும்பம் என்ற அமைப்பு தோன்றும் போது நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் கற்பாக அமைந்ததைத் தெளிவாக உணர்த்துகிறது.

"கற்பென்று சிறப்பித்துக் கூறப்படுவது வேள்விச்சடங்கோடு கூட ஒத்த குலத்தோனும், மிக்க குலத்தோனுமாகிக் கொள்ளுதற்குரிய முறைமையினையுடைய தலைவன் ஒத்த குலத்தாளும், இழிந்த குலத்தாளுமாகிய தலைவியை கொடுத்தற்குரிய முறைமையினை உடைய இருமுதுகுரவர் முதலாயினர் கொடுப்பக் கொள்வது" என்று நச்சினார்க்கினியர் இளம்பூரணரும் விளக்காத 'கரணம்' என்பதை விளக்கியும் குடும்ப அமைப்பில் இணையும் ஆண், பெண் நிலைகள் பற்றி விளக்கியுள்ளார்.

கற்பு என்பது 'கற்பித்த நெறியே' என்பதைத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் தெளிந்துள்ளனர். ஆனால் இக்கற்பு நெறியானது எவ்வாறு பெண்ணுக்கே சிறப்பானது என்பது சிந்தனைக்குரியதாகும். குடும்பம் என்ற அமைப்பினைக் காக்கும் பெண்ணே கற்பு நெறிகளைத் தனது சந்ததியினருக்குப் போதிக்க வேண்டிய சிறப்பான குணவியல்புகளையும் இயற்கையாகவே பெற்றிருந்தாள். கற்பு நெறிகளை அவளிடமிருந்தே குழந்தைகளறிந்தனர். கணவனை குழந்தையின் தந்தையாகவும், ஏனையவர்களை உறவினர்களாகவும் அமைய தாயே குழந்தைக்கு நெறிமுறையாக முதன்முதல் கற்பிக்கத் தொடங்குகின்றாள்.

அவள் கற்பிக்கும் நெறி செம்மையுடையதாக இருந்தது. மனித வாழ்வில், சமூக நிலையில் பலரையும் குழப்பநிலையின்றி அமைதியுடன் வாழ இது வழி செய்தது.

## *கற்பும் பெண்ணும்*

"மனை" என்ற பழைய சொல் அடிப்படையாகப் பெண்ணுக்கு "மனைவி" என்ற பெயர் உண்டாகின்றது. பெண், மனைவி என்ற நிலையிலிருந்து 'தாய்' என்னும் சிறப்பு நிலையை அடைகின்றாள். அந்நிலையிலே ஆணைவிட குடும்பம் என்ற அமைப்புக்கு மிக முக்கியமானவளாக மாறுகின்றாள். கணவனின் செயல்களையெல்லாம் அவதானித்து குடும்ப நிலைக்குப் பங்கம் ஏற்படாதவகையில் அனைவரும் நடந்து கொள்ள அவளே உதவுகின்றாள். கணவன் கற்பு நெறிகளில் தவறும் போது அவனைத் திருத்துகின்ற பொறுப்பும் அவளுடையதாகின்றது. ஒழுக்க நிலையிலே மனத்திண்மையற்ற ஆண் பிறபெண்களிடம் தொடர்பு கொள்வது பழைய சமுதாய நிலையிலே இருந்துள்ளது. சமூகப் பாடல்களில் பெரும்பான்மையான மருதநிலப் பாடல்கள் ஆணின் ஒழுக்கக்கேட்டையே வர்ணிக்கின்றன. குடும்ப நிலையில் வாழமுடியாத பல பெண்கள் ஆணின் ஒழுக்கச் சீர்கேட்டிற்கு இடம் கொடுக்கின்றனர். இந்நிலையிலும் பெண்ணே கற்பு நெறியினை ஆணுக்கு உணர்த்துபவளாகிறாள். இதனாலேயே குடும்ப நிலையில் வாழும் பெண்களுக்கு கற்பு சிறப்பித்துக் கூறப்பட வேண்டியதொன்றாயிற்று.

பெண்ணிடம் கற்பித்த நெறிப்படி வாழும் ஆற்றல் மிகுந்திருந்தது. ஆணைவிடப் பெண்ணே மனவுரம் மிக்கவளாக இருந்தாள். தனது நலத்தை மட்டுமின்றித் தன்னைச் சார்ந்தவர்களது நலத்தையும் காக்கின்ற கருணை உள்ளங் கொண்டவளாக வாழ்ந்தாள். இதனை தொல்காப்பியரும்,

*"கற்புங் காமமும் நாற்பால் ஒழுக்கமும்*
*மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்*
*விருந்துபுறந் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்*
*பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்"*

என்று குறிப்பிடுகிறார். இதனால் கற்பு என்பது நடைமுறைப் பொருளில் மனவுரம் என்ற கருத்தினையும் பெறுவதாயிற்று. பின் வந்த காவியங்களிலும் புராணங்களிலும் பேசப்பட்ட கண்ணகி, சீதை, மண்டோதரி, புனிதவதி, தமயந்தி, பாஞ்சாலி போன்றோர் மனவுரம் படைத்தவர்களாகக் கூறப்பட்டுள்ளனர்.

பெண்ணோடு சேர்த்துக் கற்பைப் பற்றிக் குறிப்பிடும் போது நெருப்பு இணைக்கப்பட்டுள்ளது. கற்பு 'வெம்மைப்' பண்புடையது எனவும் ஒரு விளக்கமும் உருவாகியது. கண்ணகி மதுரையை அழித்த செய்தி காப்பிய நிகழ்ச்சியாக அமைக்கப்பட்டாலும் கற்பின் பெருமையைக் காட்டவே அமைக்கப்பட்டுள்ளது. கோப்பெருந்தேவி, கண்ணகி என்ற இரு பெண்களின் கற்பு நெறிகளையும் அருகருகே வைத்து இளங்கோ காட்டுவதன் மூலம் பெண்ணின் மனவுரத்தின் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். அதே வேளை கோவலனின் மனவுரமின்னையே குடும்ப நிலையை மட்டுமின்றி நாட்டு நிலையையும் சிதைத்தது என்பதையும் காட்டியுள்ளார். மனை என்ற நிலையிலிருந்து நாடு என்னும் பரந்து பட்டநிலைவரை கற்பின் அவசியத்தை அழகுற விளக்கியுள்ளார். பெண், சமூக நலன்கள் உருவாவதற்கு ஆரம்ப காலத்திலிருந்தே காரணமானவள். சங்கப்பாடல்களிலே குடும்ப நிலையிலே ஆண் கற்பு நெறியைக் கடைபடியாது வாழும் சந்தர்ப்பங்களில் பெண் நடந்து கொள்ளும் விதம் பல பாடல்களிலே கூறப்பட்டுள்ளது.

*"நன்மனை நனிவிருந்து அயரும்*
*கைதூவு இன்மையின் எய்தாமாறு புலவேன்"*

***(6) (நற்றினை. 280)***

எனவரும் அடிகள் மனைக்கு வருகை தருகின்ற விருந்தினரை உபசரிப்பதையே முக்கிய கடமையாகக் கொண்ட பெண் தன் கணவனது கூடா ஒழுக்கத்தையறிந்தும் அவனோடு ஊடல் கொள்ளாதிருக்கின்றாள்.

கற்பித்த நெறிகளையும் மேலதிக கல்வியறிவினால் பெற்ற பகுத்தறிவையும் ஆண் இழந்து நிற்கும்போது பெண்ணே அவனைப் பாதுகாத்து நின்றாள். குடும்ப நிலையிலே அவன் கற்பு மீரல்களைப்

பாதுகாத்துச் சமூக நிலையில் அவனை உயர்த்தினாள். இதனால் திருமணம் என்னும் அம்சம் ஆணின் வாழ்வு நெறிப்படி அமைய இன்றியமையாததாயிற்று. கற்பு பற்றிப் பேசவந்த வள்ளுவரும் வாழ்க்கைத் துணை நலம் பற்றி கூறும் போது,

*"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்*
*திண்மை யுண்டாகப் பெறின்"* (குறள்-54)

என்று கூறுகிறார். 'மனவுரம்' என்றநிலையில் கற்பு, பெண்ணிடம் நிலைபெற்றிருந்ததையே விளக்கியுள்ளார். தன்னையும் காத்து தன்னைக் கொண்டவனையும் பேணி, இருவர்க்கும் குடும்ப நிலையில் அமைந்த கற்பு நெறிச் சொல்லையும் காத்து, சோர்வில்லாமல் வாழும் திறமை பெற்றவள் பெண் என்பதை உணர்த்துகிறார்.

*சமமான நிலையும் மாற்றமும்*

மரபுகளைப் பின்நோக்கிப் பார்க்கும் போது ஆரம்பக்காலத்தில் ஆணும் பெண்ணும் சமமானவர்களாகவே கருதப்பட்டனர். இடைக்காலத்தில் வகுக்கப்பட்ட நெறிகளுக்கமைய வாழ்வு நடத்த முடியாதவர்கள் கற்பு என்பதைப் பெண்ணுக்குரிய அணிகலனாக்கித் தாம் ஒழுக்க நெறிக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற்றுக் கொண்டனர். அப்பொழுதுதான் ஆண் பெண்ணைவிட உயர்ந்தவன் என்றபுதியக் கோட்பாடு தோன்றலாயிற்று. பெண் சுதந்திரமற்றவளாக ஆணுக்கு அடிமைப்பட்டவளாக அமைந்தாள். பெண் ஆணைக் கற்பழித்ததாக யாரும் கருத்துக் கூறுவதில்லை. ஆனால் விசுவாமித்திரர்-மேனகை கதையின் அடிப்படைக்கருத்து ஆணின் கற்புநெறியைப் பெண் கெடுப்பதாகவே காணப்படுகின்றது. மனவுரம் என்றநிலை ஆண் பெண் இருவருக்குமே கற்பு பொதுவான குணமாவது.

சமூக அமைப்பில் ஆண் பெண் சமநெறியுடன் வாழக் கற்பு உதவுகின்றது. அந்நெறிமுறைதவறும் ஆணும் சரி பெண்ணுஞ்சரி கற்பிழந்தவர்களாகவே கொள்ளப்பட வேண்டியவர்கள். சமூக இலக்கியப் பாடல்காட்டும் களவு, கற்பு என்னும் இரு பகுப்புகளும் மனித சமூகத்திற்கு எக்காலத்திற்கும் ஏற்புடையனவாயுள்ளன.

கற்பிக்கப்பட்ட நெறி முறைகளை ஆண் மீறும் போது அவனே தவறு செய்தவனாகின்றான். அவன் செய்கின்றதவறுக்கு உதவியாக இருப்பதால் பெண்ணும் கற்புநிலை அழிந்தவளாகிறாள். எனவே, சமூக அமைப்பு முறையில் மாற்றம் ஏற்பட ஆண்கள் காரணமாயிருந்ததையும் மறுக்க முடியாது.

சமூகத்தில் வந்து கலந்த பிறநாட்டுப் பண்பாடுகளின் தாக்கத்தினால் தமிழினத்திற்கு நேர்ந்த கேடுகளைச் சாடி நம் முன்னோர் வகுத்த நெறிகளே மனித சமூகத்திற்கு ஏற்புடையவை என பழமை பழமையென்று பாவனை பேசியவர்களை வெறுத்த பாரதி பழமை இருந்த நிலையை யாவரும் அறிய வேண்டுமென,

*"மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்" (8)*

என்று எடுத்துக்காட்டி சங்கப் புலவர்களோடு தன்னையும் இணைத்துக் கொண்டார்.

சமூக ஒருமைப்பாட்டிற்குப் பண்டைய நெறிகள் அடிப்படையாகின்றன. இயற்கை நிலைகளின் வேறுபாட்டினை அனுசரித்தே பண்டைய வாழ்வு நெறிகள் வகுக்கப்பட்டன. இன்றைய நாகரீக உலகில் பழைய மரபுகள் பல புதுமைகளாக நோக்கப்படுகின்றன. பெண்ணின் மனவுரமும் கருணையும் மனிதனைப் பாதுகாத்து நிற்பவை. வலிமை சேர்ப்பது தாய்ப்பாலே என்று இன்று விஞ்ஞானம் விளம்புகிறது. மனிதனுக்குச் சகல விடயங்களிலும் சமமாக நின்றுதவும் பெண் குடும்பம் என்றநிறுவனத்தைக் கட்டிக்காப்பவள். அப்படிக் காக்கப்படும் குடும்பங்கள் சேர்ந்தே சமூகம் உருவாகிறது. சமூகங்களின் இணைப்பினால் நாடு தோன்றுகிறது. இது இயற்கையான நடைமுறையாக இருந்து வந்துள்ளது.

## தொடர்பு முகவரி

பதிப்பாசிரியர்,
**இரா. சதாசிவம்**
செந்தமிழ்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை – 625 001.
போன் : (0452)-2532879

## இல்ல முகவரி

**இரா. சதாசிவம்**
2/404, மருதுபாண்டியர் தெரு,
வட்டாட்சியர் நகர்,
மதுரை–20.

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம்,
2/404, மருதுபாண்டியர் தெரு, வட்டாட்சியர் நகர், மதுரை-20. ✆ 2532879.

ஆசை அச்சகம், மதுரை. ✆ 26 222 50, 98434 - 32484

பதிப்பாசிரியர்

பேராசிரியர். திரு. இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

முனைவர் திரு. தமிழண்ணல்

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

டாக்டர் திரு. ந. சேதுராமன்

முனைவர் திரு. சுப. அண்ணாமலை

முனைவர் திரு. ம.ரா.போ. குருசாமி

முனைவர் திரு. அ.அ.மணவாளன்

முனைவர் கதிர் மகாதேவன்

முனைவர் நா. பாலுசாமி

முனைவர் பெ. சுயம்பு

முனைவர் திரு. அ. தட்சிணாமூர்த்தி

இராசா திரு. முருகதாஸ் தீர்த்தபதி

முனைவர் திரு. செ. கந்தசாமி

முனைவர் திரு. க. சின்னப்பா

அனுப்புநர்,
செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

From,
Secretary,
Madurai Tamilsangam,
Madurai - 625001.
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,